Registered as a Newspaper

உதயன்

சுடர் : 37
கதிர் : 252

வெள்ளிக்கிழமை
05 ஒகஸ்ட் 2022

ஆடி 20 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2053

பக்கங்கள்: 12
விலை : ரூ. 50

முச்சந்தி முரளி

"கை குடுக்கிறவை பிறகு காலை வாருறதெல்லாம் அரசியலில் சகஜம் பாருங்கோ..."

வல்வெட்டி நகரசபை தவிசாளர் தெரிவில்

காலை வாரியது சுயேச்சைக் குழு

கோரம் இன்மையால் சபை ஒத்திவைப்பு!

யாழ்ப்பாணம், ஓக. 5 -

வல்வெட்டித்துறை நகரசபை புதிய தவிசாளர் தெரிவு, கோரம் இல்லாதமை காரணமாக ஒத்திவைக்கப்பட்டது.

10

இலங்கையர்களின் உரிமை பாதுகாக்கப்படவேண்டும்

அமெரிக்க இராஜாங்கச் செயலர் அலி சப்ரியிடம் வலியுறுத்து

கொழும்பு, ஓக. 5

அமைதியான முறையில் ஒன்றுகூடுதல் உட்பட இலங்கையர்களின் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும்

11

சீனியின் விலை இனி 270 ரூபா!

இதர சில பொருள்களின் விலைகளும் குறைப்பு

கொழும்பு, ஓக. 5

சீனியின் விலையை 60 ரூபாவால் குறைத்துள்ளது அரசாங்கம். இதன்படி 330 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்ட

10

செப். முதல் வாரத்தில் இடைக்கால பட்ஜெட்!

சு.க., டலஸ் குழுவினரிடம் ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு

கொழும்பு, ஓகஸ்ட் 6

செப்ரெம்பம் மாதம் முதலாவது வாரத்தில் இடைக்கால வரவு – செலவுத் திட்டத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து அதன்மூலம் மக்களுக்கு நிவாரணங்களை வழங்கத் திட்டமிட்டுள்ளோம் என்று தெரிவித்தார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

11

அமைச்சுப் பதவிகளை பெறும் எண்ணமில்லை

விக்னேஸ்வரன் எம்.பி. தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஓக. 5

அரசாங்கத்தில் இணைந்து அமைச்சுப் பதவிகளைப் பெறும் எண்ணம் எனக்கில்லை. சிலருக்கு அமைச்சுப் பதவிகள் பெரிய விடயமாக இருக்கலாம். எனக்கு, தமிழ் மக்களின் நலனே பெரியது – இவ்வாறு தெரிவித்தார் க.வி.விக்னேஸ்வரன்.

10

வன்முறையின் முன்னோடியான

மஹிந்த சுதந்திரமாக நடமாடுவது எவ்வாறு?

சஜித் பிரேமதாஸ கேள்வி

கொழும்பு, ஓகஸ்ட் 5

தற்போதைய வன்முறை சார் அடக்குமுறையின் முன்னோடியான மஹிந்த ராஜபக்ச இன்னமும் சுதந்திரமாக வெளியே நடமாடுவதற்கு என்ன

11

காலிமுகத்திடலை கைவிடமாட்டோம்!

பொலிஸாரின் அழுத்தத்துக்கு போராட்டக்காரர்கள் பதிலடி!

கொழும்பு, ஓக. 5

காலிமுகத்திடலிலிருந்து இன்று மாலை 5 மணிக்குள் போராட்டக்காரர்கள் முற்றுமுழுதாக வெளியேற வேண்டுமென்று பொலிஸார் அவகாசம் வழங்கியுள்ள நிலையில், 'பொலிஸாரின் உத்தரவுக்கு அமையவெளியேற முடியாது' என்று போராட்டக்காரர்கள்

11

மாகாணசபை முறையை பலவீனப்படுத்த முயற்சி!

சில தனிநபர்கள் சதி என்று வடக்கு ஆளுநர் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஓக. 5

13ஆவது திருத்தச் சட்டத்தின் கீழ் மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தை பலவீனப்படுத்துவதற்கு சில தனிநபர்கள் முயற்சிக்கின்றனர்என வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா குற்றஞ்சாட்டியுள்ளார். வடக்கு ஆளுநர் ஜீவன் தியாகராஜா

11

யானை தாக்கி முதியவர் சாவு!

வவுனியா, ஓக. 5

வவுனியா - சேமமடு கிராமத்தில் யானை தாக்கி முதியவர் ஒருவர் நேற்று உயிரிழந்தார்.

68 வயதுடைய அந்த முதியவர் தேன் எடுப்

10

பேருந்து கட்டணம் குறைப்பு!

கொழும்பு, ஓக. 5

பேருந்துக் கட்டணங்கள் நேற்று நள்ளிரவு முதல் குறைக்கப்பட்டுள்ளன என்று அரசாங்கம் அறிவித்துள்ளது.

எரிபொருள் விநியோகங்கள் ஓரளவு வழமைக்குத் திரும்பிய தாலும், டீசல் மற்றும் பெற்றோலுக்கான விலைகள்

10

ஜோசப் ஸ்டாலின் விளக்கமறியலில்!

கொழும்பு, ஓக. 5

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் ஜோசப் ஸ்டாலினை, எதிர்வரும் 12ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டது நீதிமன்றம்.

11

மின்வெட்டு சுருங்கியது

கொழும்பு, ஓக. 5

மின்வெட்டு நேரம் இன்று முதல் ஒரு மணித்தியால

10

நாயைக் கொடூரமாகக் கொன்று சமூக ஊடகங்களில் காணொலி

புங்குடுதீவில் இழிசெயல்; இருவர் கைது

யாழ்ப்பாணம், ஓக. 5

புங்குடுதீவில் நாயொன்றைக் கொடூரமாக வெட்டிக்கொன்று, அதைக் காணொலியாகப் பதிவுசெய்து சமூக ஊடகங்களில் பதிவிட்டவர்களில் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். பிரதான சந்தேகநபர் தலைமறைவாகியுள்ளார்.

11

ஜோசப் ஸ்டாலினை உடன் விடுவிக்குக!

பாரதூரமான விளைவுகளைச் சந்திப்பீர்கள் அரசுக்கு ஆசிரியர் சங்கம் எச்சரிக்கை

கொழும்பு, ஓக. 5

ஜோசப் ஸ்டாலின் உடனடியாக விடுதலை செய்யப்படவேண்டும் இல்லையென்றால் அரசாங்கம் பாரதூரமான

11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ். போதனா பணிப்பாளர் மீது அடுக்கப்படும் குற்றச்சாட்டுக்கள்

விசாரணை மூலம் தீர்வை கோருகிறார் பணிப்பாளர்

யாழ்ப்பாணம், ஓக.5

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைப் பணிப் பாளராக மருத்துவர் த.சத்தியமூர்த்தி மீண்டும் பதவியேற்ற பின்னர் பணியாளர்களை அச்சுறுத்துதல், அடி பணிய வைத்தல், இடமாற்றம் வழங்கப்படும் என்று அச்சு றுத்துவது போன்ற செயற்பாடுகளை முடுக்கிவிட்டுள்ளார். இவை தொடர்பாக பக்கச்சார்பற்ற நீதிப் பொறிமுறையை வலியுறுத்தியுள்ளோம் என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் யாழ்ப்பாணக் கிளை தெரிவித்தது.

இந்தக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பாகப் பதிலளித்த யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைப் பணிப் பாளர், என் மீதான குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக விரைவில் சுகாதார அமைச்சுக்குக் கடிதம் மூலம் தெரிவித்து விசாரணை மூலம் தீர்வைக் கோரவுள் ளேன் என்று தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அரச மருத்துவ அதிகாரி கள் சங்கத்தின் யாழ்ப்பாணக் கிளை அனுப்பியுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளதாவது:-

ஓரளவுக்கு நேர்மையான, நீதியான நிர்வாகத்தை உறுதிப்படுத்துவது எமது சங்கத்தின் பெரும் பொறுப் பாகும். எமது சங்கத்தின் முக்கியமான முடிவுகள் நிர்வாகப் பொதுக்கூட்டங்கள் ஊடாகவே எடுக்கப் படுகின்றன.

கொரோனாத் தொற்று உச்சத்தில் இருந்தபோது பிரதிப் பணிப்பாளர்கள், மருத்துவ நிபுணர்கள், மருத்துவர்கள், தாதியர்கள் மற்றும் அனைத்து மருத்துவமனை ஊழியர்களின் கடுமையான கூட்டு முயற்சியால் நிலைமை நிர்வகிக்கப்பட்டது. பிரிட்ட னுக்கு வெளிநாட்டுப் பயிற்சிக்காகச் சென்றிருந்த மருத்துவர் த.சத்தியமூர்த்தி கொரோனா இடர்காலம் முடியும் தறுவாயில் இடைநடுவே நாடு திரும்பினார். கொரோனா இடரைச் சமாளிப்பதற்காக மருத்து வர் த.சத்தியமூர்த்தியை சுகாதார அமைச்சு மீள அழைத்தது என்ற செய்தி ஊடகங்கள் ஊடாகப் பரப்பப்பட்டது.

உண்மையில் மருத்துவர் த.சத்தியமூர்த்தியின் நுழைவிசைவு முடிந்த காரணத்தாலேயே அவர் இடைநடுவே நாடு திரும்பியிருந்தார். அவருக்கு மீள நுழைவிசைவு கிடைக்கும் வரையில் மருத்து வமனையின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார். அப்போது கொரோனாத் தொற்று நிலைமை முடி வுக்கு வந்திருந்தது.

இந்த நிலையில், கொரோனாத் தொற்று நிலைமை கட்டுப்படுத்தப்பட்டிருந்த நிலையில் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம், மருத்துவமனையின் பிரதிப் பணிப்பாளர்களினதும், மருத்துவமனை ஊழியர் களினதும் செயற்பாடுகளைப் பாராட்டி அறிக்கை ஒன்றை வெளியிட்டது.

தொற்று நிலைமையைக் கட்டுப்படுத்திப் பெற்ற வெற்றியானது கூட்டு முயற்சியின் வெளிப்பாடு என்பது வெளிப்படுத்தப்பட்டது. இது மக்கள் மத்தி யில் தனது செல்வாக்கைக் குறைக்கும் என்று எண் ணத்தில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைப் பணிப்பாளர், பிரதிப் பணிப்பாளர்களுடனும், அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்துடனும் முறுகலை ஏற்படுத்த ஆரம்பித்தார்.

பிரதிப் பணிப்பாளர்களுடன் இணைந்து இயங்கிய ஊழியர்களுக்கு அச்சுறுத்தல்களும், இடமாற்றங் களும் வழங்கப்பட்டிருந்த நிலையில், அவர்களை மன உளைச்சலுக்கு ஆளாக்கும் செயற்பாடுகளும் நடந்தன. பணிப்பாளரின் இந்தச் செயற்பாடுக ளையும், போலிப் பரப்புரைகளையும் கண்டித்து அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தொழிற்சங்க நடவடிக்கைக்குத் தீர்மானித்திருந்தபோதும், சீரான நேர்மையான நிர்வாகம் உறுப்படுத்தப்படும் என்று பணிப்பாளர் வழங்கிய உறுதிமொழிக்கு அமைய தொழிற்சங்க நடவடிக்கைகள் இடைநிறுத்தப்பட்டன. ஆனாலும், மருத்துவ நெறிக்குப் புறம்பான பணிப்பாளரின் செயற்பாடுகள் தொடர்ந்த வண்ணமேயுள்ளன.

தொடர்ச்சியான கலந்துரையாடல்களில் எடுக்கப் பட்ட முடிவுகள் மீறப்பட்டு, சீர்கேடான நிர்வாகம் தொடர்வதால் அவர் மீதான குற்றச்சாட்டுக்களைப் பகிரங்கப்படுத்த வேண்டிய தேவை எழுந்துள்ளது. போதியளவு சிறப்பான சிகிச்சைகளை வழங்கக் கூடிய சிறந்த நிறுவனமாக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையை மாற்றுவதே எமது குறிக் கோளாகும். பணிப்பாளரின் தனிப்பட்ட வாழ்வைப் பாதிக்கும் எந்தவொரு செயற்பாட்டையோ, குற்றச் சாட்டையோ நாம் முன்வைக்கவில்லை.

பணிப்பாளரின் செயற்பாடுகளை விமர்சிக்கும் மருத்துவ நிபுணர்கள், மருத்துவர்கள், சக பணி யாளர்களுக்கு எதிராகப் புனையப்பட்ட விசாரணை களை ஏற்படுத்துவதன் மூலம் சக பணியாளர்களை அச்சுறுத்தி தனது நடவடிக்கைகளைத் தொடருதல், வரம்பை மீறி மருத்துவ நிபுணர்களை சேவை யில் இருந்து நிறுத்துதல், சட்டத்துக்குப் புறம்பான செயற்பாடுகளை விமர்சிக்கும் பணியாளர்களுக்குக் கீழ்த்தரமான தண்டனைகள் வழங்குதல், நிதிக் கையாள்கை தொடர்பான குற்றச்சாட்டு, கொரோனா வால் உயிரிழந்தவர்களின் உடல்களை பக்கச்சார் பாக சுற்றறிக்கைகளின் அறிவுறுத்தலுக்கு எதிராக வீடுகளுக்கு விடுவித்தல், பொதுவான நிர்வாகச் செயல் இழப்புக்கள் போன்ற குற்றச்சாட்டுக்களைக் கண்டறிவதற்கான பக்கச்சார்பற்ற நீதிப் பொறி முறையை வலியுறுத்தியுள்ளோம்.

தற்போது மருத்துவமனையின் பணிப்பாளராக மருத்துவர் த.சத்தியமூர்த்தி பதவியேற்ற பின்னர், தெரிவு செய்யப்பட்ட பணியாளர்களுக்கு அச்சுறுத் தல் விடுத்தல், இடமாற்ற எச்சரிக்கை விடுப்பது போன்ற செயற்பாடுகளை ஆரம்பித்துள்ளார் என் றும் அறியமுடிகின்றது -என்றுள்ளது.

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் குற்றச் சாட்டுகள் தொடர்பாக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைப் பணிப்பாளர் மருத்துவர் த.சத்திய மூர்த்தியிடம் கேட்டபோது;

மருத்துவமனை என்பது தனிப்பட்ட பணிப்பாள ருக்கு உரித்தானது அல்ல. என் மீது சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக சுகாதார அமைச்சுக் குக் கடிதம் எழுதியுள்ளேன். விசாரணைகள் நடத்தி அவற்றுக்கு உரிய தீர்வு வழங்கப்படவேண்டும். இந்தக் குற்றச்சாட்டுக்களை எதிர்கொள்ளாவிட்டால் மக்கள் மத்தியில் பிழையான கருத்து ஏற்பட்டு, சேவைகளில் பாதிப்பு ஏற்படலாம்.

இந்த விடயங்கள் தொடர்பாகத் தொழிற்சங்கங் களுடன் கலந்துரையாடி உரிய தீர்வைப் பெற வேண்டும். எனது வரப்புக்குட்பட்ட கடமைகளைச் செய்வதற்கு எப்போதும் தயங்கமாட்டேன் -என்றார்.

(ஒ-20)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை வங்கி ஊழியர் சங்கத்தினர் கைது!

கொழும்பு, ஓக.5

இலங்கை வங்கி ஊழியர் சங்கத்தின் செயலாளர் தனஞ்சய சிறிவர்தன மற்றும் முன்னாள் தலைவர் பாலித எடம்பாவல ஆகியோர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் கடவத்த மற்றும் ரத்தொலுகம ஆகிய பிரதே சங்களில் வைத்து நேற்று கைதாகியுள்ளனர். கடந்த 9ஆம் திகதி மக்கள் எழுச்சிப் போராட்டத்தின்போது ஜனாதிபதி மாளிகைக்குள் பிரவேசித்த குற்றச்சாட் டில் இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். தற்போது அவர்களை விசாரணைக்காக கொழும்பு மத்திய குற் றப்புலனாய்வு பிரிவினர் தடுத்து வைத்துள்ளனர் என பொலிஸார் தெரிவித்தனர். (ச-இ)

மாட்டை சட்டவிரோதமாக இறைச்சியாக்கிய இருவர் கைது!

யாழ்ப்பாணம், ஓக. 5

சுழிபுரம் - திருவடிநிலைப் பகுதியில் மாட்டை சட்ட விரோதமாக இறைச்சியாக்கிய குற்றச்சாட்டில் இருவர் நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டனர்.

மாட்டை இறைச்சியாக்கிக் கொண்டிருப்பதாக வட்டுக் கோட்டைப் பொலிஸாருக்குக் கிடைத்த புலனாய்வுத் தகவலின் அடிப்படையில் குறித்த பகுதிக்கு விரைந்த வட்டுக்கோட்டைப் பொலிஸார் இறைச்சியாக்கப்பட்ட மாட்டின் தலைப்பகுதியைக் கைப்பற்றினர்.

அதனையடுத்து மாட்டை சட்டவிரோதமாக இறைச்சி யாக்கிய குற்றச்சாட்டில் சுழிபுரம் பெரியபுலோ பகுதி யைச் சேர்ந்த 42 மற்றும் 32 வயதான இருவரைக் பொலிஸார் கைதுசெய்தனர். (ஒ-14-125)

சாவகச்சேரி சுகாதாரப் பணியகத்தில் பிரதி வெள்ளிக்கிழமைகளில் பைஸர்

சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணியகத்தில் ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் பைஸர் தடுப்பூசி ஏற்றப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வாரம் பைஸருக்குத் தட்டுப்பாடு நிலவியதை யடுத்து ஒருதொகுதி பைஸர் தடுப்பூசிகள் பணியகத் துக்கு இந்த வாரம் கிடைக்கப்பெற்றன.

அதற்கமைய இன்று காலை 8 மணி தொடக்கம் தடுப் பூசி ஏற்றப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை- சினோபார்ம் தடுப்பூசி ஏற்றவுள்ளவர் களும் பணியகத்துக்கு வருகைதந்து சினோபார்ம் தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ளலாம் என்றும் அறி விக்கப்பட்டுள்ளது. (ஒ-14-9)

காணாமல் ஆக்கப்பட்டவர்கள் பற்றிய

அலுவலக ஆணையாளர்களாக இரு சட்டத்தரணிகள் நியமனம்

கொழும்பு, ஓக.5

காணாமல் ஆக்கப்பட்டவர்கள் அலுவலகத்தின் ஆணையாளர்களாக இரண்டு சட்டத்தரணிகளின் பெயர்கள் நாடாளுமன்ற குழுவால் பரிந்துரைக்கப் பட்டு ஜனாதிபதி செயலகத்தால் நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டுள்ளன.

அதன்படி சட்டத்தரணி மாதவ் ஜெயவர்த்தன மற்றும் சட்டத்தரணி சம்பத் பெரேரா ஆகியோர் ஆணையாளர் களாக புதிதாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

காணாமல் ஆக்கப்பட்டோர் பற்றிய அலுவலகத்தின் ஆணையாளர்களாகச் செயற்பட்டு வந்த மருத்துவர் விஜயமானே மற்றும் உரிமைக்ள் செயற்பாட்டாளரும், சட்டத்தரணியுமான சிராஸ் நூர்தீன் ஆகியோர் அண் மையில் தமது ஆணையாளர் பதவியைத் துறந்தனர். இந்தநிலையில் குறித்த வெற்றிடங்களுக்கு மேற்படி இரண்டு சட்டத்தரணிகளும் புதிதாக நியமனம் செய் யப்பட்டுள்ளனர். இதேவேளை- காணாமல் ஆக்கப் பட்டோர் பற்றிய அலுவலகத்தின் சட்டத்தின் பிரகாரம் ஏழு ஆணையாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளமை குறிப் பிடத்தக்கது. (ச-இ)

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

படிப்பது தேவாரம், இடிப்பது சிவன் கோயில்!

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் நிகழ்த்திய அரசாங்கத்தின் கொள்கைவிளக்க – அக்கிராசன – உரை மிகச்சிறப்பானது. கடந்த தசாப்தத்தில் ஏனைய ஜனாதிபதிகள் நிகழ்த்திய அக்கிராசன உரைகளைவிட ரணிலின் உரை மேம்பட்டிருந்தது. பல அம்சங்களையும் அவர் தொட்டுச் சென்றிருந்தார். அரசியல் அனுபவசாலி என்பதற்கு அவரது உரையே சான்று.

பொருளாதார நெருக்கடியால் நாட்டின் முன்னாள் ஜனாதிபதி தப்பியோடிய சூழலில் புதிய ஜனாதிபதியாகப் பொறுப்பேற்றுள்ளார் ரணில். அவரது அரசியல்வாழ்கையில் இது வாழ்வா? சாவா? போட்டிக்களம். இந்தப் பேரிடரிலிருந்து நாட்டை மீட்டெடுக்க அவர் தவறுவாரானால் அவரது அரசியல் வாழ்வும், பாரம்பரிய தேசியக் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்டமும் முடிவுக்கு வரும். ஆனால் தடைகளைத் தாண்டி பொருளாதாரத்தை மீட்டெடுப்பாராக இருந்தால் அங்கிருந்துதான் அடுத்த கட்டத்துக்கான ஆரம்பம் தொடங்கும்.

ஆயினும் அவரது உரைக்கும் செயற்பாட்டுக்குமான நெருக்கம் என்பது எட்டாப் பொருத்தம் போலவே இருக்கின்றது. போராட்டக்காரர்களை வேட்டையாட மாட்டேன் என்று முழங்கி அவர்களைப் பாதுகாப்பதற்கு ஆணைக்குழு அமைப்பேன் என்றெல்லாம் உரையாற்றி முடிய, மூத்த தொழிற்சங்கவாதியான ஜோசப் ஸ்டாலின் உட்பட பல்வேறு தொழிற் சங்கவாதிகளை அவரது பொலிஸ் படை கைது செய்திருக்கின்றது.

வன்முறையாளர்கள் மீது சட்டம் பாயும் என்பதை ரணில் தனது உரையில் சொல்லியிருந்தார். அதிலும் மே 9ஆம் திகதி தாக்குதலாளிகள் மீது சட்டம் பாயும் என்றும் குறிப்பிட்டிருந்தார். ஆனால் நடப்பது அதற்கு தலைகீழாகவே உள்ளது. அமைதிவழியில் போராடியவர்களையும், அவர்களுக்கு ஆதரவளித்தவர்களையும், குரல் எழுப்புபவர்களையுமே தேடித் தேடி கைது செய்கின்றனர். தொழிற்சங்கவாதியான ஜோசப் ஸ்டாலின் உள்ளிட்டோர் எந்தவொரு வன்முறைச் சம்பவத்துடனும் தொடர்புடையவர்கள் அல்லர். ஆனால் அவர்கள் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்படுகின்றனர். ஆட்சியாளர்களை வீட்டுக்கு அனுப்புவதற்காக குரல் எழுப்பும் சகலரும் ஏதோவொரு காரணங்களை முன்வைத்து வேட்டையாடப்படுகின்றனர்.

ஆனால் மறுபுறம், மே 9ஆம் திகதி போராட்டக்காரர்கள் மீது வன்முறையை ஏவிவிட்ட முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ச மீதோ அவரது குழுவினர் மீதோ எந்தவொரு சட்டநடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. ஒப்புக்குத்தன்னும் மஹிந்த விசாரணைக்கு உட்படுத்தப்படவில்லை. நீதி நிலைநாட்டப்படவில்லை என்பதற்கு அப்பால் நீதி நிலை நாட்டப்படுகின்றது என்பதைக் கூட காண்பிக்க இந்த அரசாங்கம் தயாரில்லை . ரணிலின் உரைக்கும் நடைமுறைக்கும் சம்பந்தம் இல்லை என்பதே இப்போது வெளிப்படையாகத் தெரிகின்றது. ஒருபுறம் தேவாரம் படித்துக்கொண்டே மறுபுறத்தில் சிவன் கோயிலை இடிப்பது போல, ரணில் சொல்வது ஒன்றாகவும் அவர் செய்வது இன்னொன்றாகவுமே இருக்கின்றது.

ஜனாதிபதி ரணில், ராஜபக்சக்களின் தயவுடன்தான் ஜனாதிபதி பதவிக்குத் தெரிவு செய்யப்பட்டார். அவரது நீண்ட காலக் கனவு நிறைவேறுவதற்கு கைகொடுத்தவர்கள் ராஜபக்சக்கள் தான். அதனால் அவர்களுக்கு தலையால் கிடங்கு கிண்டி மண்டியிட்டு ரணில் நன்றி செலுத்துகின்றாரோ என்று எண்ணத் தோன்றுகின்றது. ராஜபக்சக்கள் தங்களின் அரசியல் சகாப்தத்தை முடிவுக்கு கொண்டு வந்த போராட்டக்காரர்கள் மீது கொலைவெறியில் இருக்கின்றனர். போராட்டக்காரர்கள் மீது தங்களால் நடவடிக்கை எடுக்க முடியவில்லை என்ற ஆதங்கம் ராஜபக்சக்களுக்கு இருக்கின்றது. அதனால்தான் என்னவோ, தங்கள் தயவால் ஆட்சிக்கு வந்த ரணிலைக் கொண்டு போராட்டக்காரர்களைத் துன்புறுத்துகின்றார்கள்.

ராஜபக்சக்களின் நண்பன் இல்லை. தான் மக்களின் நண்பன் என்று ஜனாதிபதி ரணில் கூறியிருந்தாலும், அவர் என்னவோ ராஜபக்சகளின் நீட்சியாகத்தான் தனது ஆட்சியைத் தொடர்கின்றார். ராஜபக்சக்கள் ஆட்சியில் தொடர்ந்திருந்தால், போராட்டங்களுக்கு காரணகர்த்தாக்கள் என்று எவரையெல்லாம் உள்ளே தள்ளியிருப்பார்களோ, அவர்கள்தான் இப்போது சிறைக்கூண்டுக்குள் தள்ளப்படுகின்றனர்.

ரணில் நீதியை நிலைநாட்டுபவராக இருந்திருந்தால், இந்த வன்முறைக்கு எல்லாம் தூபம்போட்ட மஹிந்தவையே முதலில் கைது செய்திருக்கவேண்டும். அதை அவர் செய்யாத வரை, அவரது உரைக்கும் நடைமுறைக்கும் சம்பந்தமில்லை என்பதோடு, நாட்டுக்கு மீண்டும் கிடைத்திருப்பது பதிதோடு பதினொராவது ஜனாதிபதிதான் என்பதும் நிதர்சனமாகும்.

நாளொரு நல்வார்த்தை

"கற்காமல் இருப்பதைவிட பிறக் காமல் இருப்பதே நல்லது! ஏனெனில் அறியாமைதான் தீவினையின் மூலவேர்" - **பிளேட்டோ**



'கோத்தா கோ கம'வுக்கு பொலிஸார் காலக்கெடு

கொழும்பு, ஓக.5

'கோத்தா கோ கம' போராட்டக்களத்தில் தங்கியுள்ளவர்கள் அங்கிருந்து வெளியேறுவதற்கு காலக்கெடு விதிக்கப்பட்டுள்ளது.

அங்கு தங்கியிருப்போர் இன்று வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு முன்னர் அங்கிருந்து வெளியேற வேண்டும் என்று பொலிஸார் பொது அறிவிப்பு ஒன்று விடுக்கப்பட்டுள்ளது.

இன்று மாலைக்குள் அனைத்துக் கட்டமைப்புக்களையும் அகற்றிவிட்டு அங்கிருந்து வெளியேறவேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

(எ-இ)

பொலிஸ் உத்தரவுக்கு எதிராக ரிட் மனுக்கள்

கொழும்பு, ஓக.5

காலிமுகத்திடலில் தங்கியிருப்போர் அங்கிருந்து வெளியேறுவதற்குப் பொலிஸார் காலக்கெடு விதித்துள்ள நிலையில், அதை எதிர்த்து மேன்முறையீட்டு நீதிமன்றில் 3 ரிட் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

காலிமுகத்திடலில் 'கோத்தா கோ கம' போராட்டக்களத்தில் தங்கியிருப்போர், அங்கிருந்து இன்று மாலைக்குள் வெளியேற வேண்டும் என்று பொலிஸார் பொது அறிவித்தல் ஒன்றை விடுத்துள்ளனர்.

அந்த உத்தரவை இடைநிறுத்தவேண்டும் என்று வலியுறுத்தியே ரிட் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

(எ-இ)

ஸ்டாலினின் கைதுக்கு மேரி லோலர் கண்டனம்

கொழும்பு, ஓக.5

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் கைது செய்யயப்பட்டமை தொடர்பாக ஐ.நா. மனித உரிமைகள் தொடர்பான விசேட அறிக்கையாளர் மேரி லோலர் கேள்வி எழுப்பியுள்ளார்.

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் நீதிமன்ற உத்தரவை மீறி அரசாங்கத்துக்கு எதிராகப் போராட்டம் நடத்தினார் என்ற குற்றச்சாட்டில் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டார்.

இது தொடர்பாகத் தனது ருவிற்றர் பக்கத்தில் பதிவிட்டுள்ள மேரி லோலர், இன்று (நேற்று முன்தினம்) மாலை 6 மணியளவில் பிரபல மனித உரிமைகள் பாதுகாவலர் ஜோசப் ஸ்டாலின் கைது செய்யப்பட்டார் என்று இலங்கையில் இருந்து குழப்பகரமான செய்திகளைக் கேட்கின்றேன்.

ஜோசப் ஸ்டாலின் போன்ற மனித உரிமைப் பாதுகாவலர்களின் பணி சமீபத்திய வாரங்களில் முன்னெப்போதையும் விட முக்கியமானது.

மனித உரிமைப் பாதுகாவலர்களின் இத்தகைய செயற்பாடுகள் ஆதரிக்கப்படவேண்டுமே தவிர தண்டிக்கப்படக்கூடாது என்று தெரிவித்துள்ளார்.

(எ-இ)

நாளை
06.08.2022
சனிக்கிழமை
ஆடி 21
சுபநேரம் : 03.04 - 04.34
ராகுகாலம்: 09.04 - 10.34

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12ஆம் ஆண்டு நினைவஞ்சலி

சண்முகம் விஸ்வநாதர் முருகேசு

'SVM' என்ற மூன்றெழுத்தால்
எவ்வுலகிலும் அறியப்பெற்ற ஏந்தலே!
ஆண்டுகள் பன்னிரண்டு ஆனாலும்,
ஐயா! உங்கள் நினைவிலேயே நாமின்றும்!

தமிழினத்தின் அடையாளமாய்,
காரைநகரின் நிமிர்வாய்,
வர்த்தக உலகின் வைரமாய்,
அற உலகின் ஆணிவேராய்
ஆன்மீக உலகின் காவலனாய்
உழைப்பில் ஓங்கிய வடிவமாய்
யாழ்ப்பாணத்தின் பொருளாதார அடையாளமாய்
விளங்கியதே SVM மூன்றெழுத்தே!

வழமோங்க வாழ வழி செய்த
வள்ளலே உங்கள் வழி நிற்போம்!

உரிமையாளர்
பணியாளர்கள்
குடும்பத்தினர்.

S.V.M (PVT) LTD - 122, Damstreet, Colombo-12.
SVMURUGESU- 154, Hospital Road, Jaffna.
SVMURUGESU (PVT) LTD - 106, Hospital Road, Jaffna.
S.V.M. DISTRIBUTORS (PVT) LTD - 160, Standely Road, Jaffna.
SVM FUEL MART - 173, 175, Palaly Road, Thirunelvely, Jaffna.
S.V.M. ENTERPRISE (PVT) LTD - 288, A9 Road, Karadipokku, Killinochi.

தோற்றம் 23.12.19523
மறைவு 16.08.2010

ஜோசப் ஸ்டாலினை விடுதலை செய்க; தொழிற்சங்கங்கள் நேற்று போராட்டம்

கொழும்பு, ஒக.5

ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் கைது செய்யப்பட்டமையைக் கண்டித்து கொழும்பு கோட்டை ரயில் நிலையத் துக்கு முன்பும் யாழ்ப் பாணம் மற்றும் வவுனியா மாவட் டங்களிலுள்ள பல பாடசாலைகளி லும் நேற்று எதிர்ப்பு ஆர்ப்பாட்டங் கள் முன்னெடுக்கப்பட்டன.

ஆசிரியர் சங்கம் மற்றும் தொழிற் சங்கங்கள் ஒன்றிணைந்து இந் தப் போராட்டங்களை முன்னெ டுத்தன.

நேற்றுமுன்தினம் இலங்கை ஆசிரியர் சங்கத்தின் அலுவலகத் துக்குள் நுழைந்த சுமார் 50 வரை யிலான பொலிஸார் இலங்கை ஆசிரியர் சங் கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலி னைக் கைதுசெய்தனர்.

நீதிமன்ற உத்தரவை மீறிப் போராட்டம் நடத்தியதற்காக அவர் கைதுசெய்யப்பட்டார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த நிலையில் ஜோசப் ஸ்டா லினை உடனடியாக விடுதலை செய்யுமாறு வலியுறுத்தி ஆசிரி யர் சங்கம் மற்றும் தொழிற்சங் கங்கள் ஒன்றிணைந்து நேற்று கொழும்பு கோட்டை ரயில் நிலையத்தில் போராட்டத்தில் ஈடு பட்டன.

யாழ்ப்பாணம்

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் ஜோசப் ஸ்டாலினின் கைதைக் கண்டித்து யாழ்ப்பாணத்திலுள்ள பாடசா லைகளில் அதிபர் மற்றும் ஆசி ரியர்கள் இணைந்து நேற்று கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது ஜோசப் ஸ்டாலி னின் கைதைக் கண்டிக்கும் வாச கங்களை கொண்ட பதாகை களை ஏந்திப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

வவுனியா

இலங்கை ஆசிரியர் சங்க பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலினின் கைதுக்கு எதிராக வவுனியாவிலும் பல பாடசாலைக ளில் ஆசிரியர்கள் நேற்று எதிர்ப் புப் போராட்டங்களில் ஈடுபட்டனர். இதன்போது ஜனநாயக ரீதியாக உரிமைக்காக போராடிய எமது பொதுச்செயலாளர் முறையற்ற விதத்திலே கைதுசெய்யப்பட்டுள் ளார். அவர் உடனடியாக விடுவிக் கப்பட வேண்டும் என வலியுறுத் தினர். (ஒ)10.20)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எரிபொருள் வரிசை முரண்பாடு;
துப்பாக்கியைக் காட்டி பொலிஸார் மிரட்டல்!
கைதடியில் சம்பவம்

கொடிகாமம், ஒக.5

கைதடி பலநோக்கு கூட்டுறவுச் சங்க எரிபொருள் நிரப்பு நிலையத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற முரண் பாட்டில் முன்னாள் நகர சபை உறுப்பினரை கைத்துப் பாக்கியைக் காட்டி பொலிஸார் ஒரு வர் அச்சுறுத்தியுள் ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதா வது:-

கைதடி ப.நோ.கூ.சங்க எரிபொருள் நிரப்பு நிலையத்தில் நேற்றுமுன்தினம் பெற்றோல் விநியோகிக் கப்பட்டது. இதன்போது அங்கு கடமையில் நின்ற பிரதேசசெயலக உத்தியோகத்தர் வரிசையில் நின்ற சிலரை வரிசைக்கு மாறாக பெற்றோல் நிரப்ப அனுமதித்துள்ளார்.

இதனை அவதானித்த குறித்த முன்னாள் நகர சபை உறுப்பினர் மக்கள் நீண்ட நேரம் வரிசையில் நின்று எரிபொருள் பெறுகின்றனர். ஆனால் நீங்கள் இடையி டையே உங்களுக்கு வேண்டியவர்களை அனுமதிக்கி றீர்கள் எனத் தெரிவித்துள் ளார்.

இந்தநிலையில் முன்னாள் நகரசபை உறுப்பினரோடு பிரதேச செயலக உத்தியோகத்தர் மற்றும் பொலிஸ் அதிகாரி ஆகியோர் முரண்பட்டதோடு திடீரென பொலிஸ் அதிகாரி தனது கைத்துப்பாக்கியை எடுத்து நகர சபை உறுப்பினரின் கழுத்தில் வைத்து அச்சுறுத்தியுள்ளார் என அங்கு நின்றவர்களால் தெரிவிக்கப்படுகிறது. இத னால் அங்கு நின்றவர்கள் அச்சமடைந்ததோடு பலர் எரி பொருள் நிரப்பாமல் திரும்பிச் சென்றதையும் காண முடிந்தது எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

போராட்டக்களங்கள் மீதான தாக்குதல்

மீறப்பட்ட ஆலோசனை: நீதிமன்றம் கடும் சீற்றம்

கொழும்பு, ஓக.5

'கோ'த்தா கோ கம' மற்றும் 'மைனா கோ கம' போராட்டக் களங்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல் தொடர்பான விசாரணைகளில் சட்டமா அதிபரின் ஆலோசனைகள் பொலிஸ்மா அதிபரால் பின்பற்றப்படாமைக்கு கடும் கண்டனத்தை வெளியிட்டுள்ள கோட்டை நீதிவான் தினி கமகே, கண்டிப்பான நடவடிக்கை எடுக்கப்படவேண்டுமென்று அறிவித்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணை நேற்றுமுன்தினம் நீதிமன்றில் விசாரணைக்கு வந்தது.

பாதிக்கப்பட்டோர் தரப்பில் முன்னிலையான ஜனாதிபதி சட்டத்தரணி மைத்திரி குணரத்ன, சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் மீது குற்றப் புலனாய்வுப் பிரிவினர் நடவடிக்கை எடுக்காமை தொடர்பில் சுட்டிக்காட்டினார்.

சட்டமா அதிபரால் முன்வைக்கப்பட்ட விடயங்களை ஆராய்ந்த நீதிவான் தினி கமகே, இரு வேறு உத்தரவுகளை சட்டமா அதிபருக்குப் பிறப்பித்தார்.

தேசபந்து தென்னக்கோன் தொடர்பில் முன்னெடுக்க வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக மூன்று தடவைகள் சட்டமா அதிபர் ஆலோசனைகளை வழங்கியுள்ளார் என்றும், அவை செயற்படுத்தப்படாமையை எந்தவகையிலும் ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் அவர் தெரிவித்தார்.

சட்டமா அதிபரின் ஆலோசனைகளை செயற்படுத்தாமை தொடர்பில் முன்னெடுக்க முடியுமான நடவடிக்கைகள் தொடர்பில் நீதிமன்றத்துக்கு அடுத்த வழக்குத் தவணையில் அறிவிக்கவேண்டுமென்று அவர் உத்தரவிட்டார்.

சட்டமா அதிபரின் ஆலோசனைகளை நடைமுறைப்படுத்த சட்டமா அதிபர் உடனடியாகத் தலையீடு செய்யவேண்டுமென்றும் அவர் உத்தரவொன்றைப் பிறப்பித்தார். (எ-இ)

நல்லூர்க் கந்தன் மஹோற்சவ சிறப்பம்சம்

ஆட்கொள்ளவாராய்

நல்லூரில் உறையும் கானமயில்நாதனே
தொல்லை தரு மிடியும் பிணியும் நீங்கியெம்
இல்லையெல்லாம் துன்பம் தொலைந்திடவே
அல்லல் அறுத்து ஆட்கொள்ள வாராய் நீ

செல்வவேலாயுதம்

எரிபொருள் தட்டுப்பாடு

கழிவுத் தண்ணீர் அகற்றவில்லை

சாவகச்சேரி, ஓக. 5

எரிபொருள் தட்டுப்பாட்டால் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையின் விடுதிகள் மற்றும் வெளி நோயாளர் பிரிவுகளிலுள்ள மலசலகூடங்களின் கழிவுத் தண்ணீர் அகற்றப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

இதனால் நோயாளர்கள் மற்றும் உதவியாளர்கள் பல சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

இது தொடர்பாக மருத்துவமனை நிர்வாகத்துடன் தொடர்புகொண்டு கேட்டபோது, எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக கழிவுத் தண்ணீர் அகற்றும் வாகனங்கள் வராததால் இந்த நிலை காணப்படுகின்றது எனத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-14-9)

புதுக்குடியிருப்பு

பிரதேச செயலக எரிபொருள் பொலிஸாரால் ஒப்படைப்பு

முல்லைத்தீவு, ஓக.5

முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு செயலகத்தில் இருந்து எடுத்துச் செல்லப்பட்ட எரிபொருள்களை பொலிஸார் பிரதேச செயலகத்திடம் மீள ஒப்படைத்துள்ளனர் என முல்லைத்தீவு மாவட்டச் செயலர் க.விமலநாதன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

கடந்த 30ஆம் திகதி புதுக்குடியிருப்புப் பிரதேச செயலகத்தை சோதனையிட பொலிஸார் அனுமதிகோரினர்.

மக்களுக்குத் தெளிவுபடுத்தவும் வெளிப்படைத்தன்மையை பேணுவதற்கும் பிரதேச செயலகத்தை சோதனையிட அனுமதி வழங்கப்பட்டது.

அதன்போது அலுவலகத் தேவைக்கு சேமித்து வைக்கப்பட்ட எரிபொருளை பொலிஸார் எடுத்துச் சென்றனர்.

இந்தநிலையில் குறித்த எரிபொருளை நேற்றுமுன்தினம் பிரதேச செயலகத்திடம் பொலிஸார் மீள ஒப்படைத்துள்ளனர் - என்றார். (ச-13)

யாழ்.ப.தெ.வ. கூட்டுறவுச்சங்கங்களுக்கு

இ.போ.ச ஊடாக எரிபொருள்

யாழ்.மாவட்டச் செயலர் உறுதி

யாழ்ப்பாணம், ஓக. 5

பனை அபிவிருத்திச் சபையுடன் தொடர்புடைய யாழ்ப்பாணத்தின் கூட்டுறவுச்சங்கங்களுக்குச் சொந்தமான உற்பத்தி நிலையங்கள் மற்றும் மதுபான ஆலைகளுக்கு இலங்கைப் போக்குவரத்துச்சபையின் ஊடாக எரிபொருள் விநியோகிக்கப்படும் என்று யாழ்.மாவட்டச் செயலர் க.மகேசன் உறுதியளித்துள்ளார்.

யாழ்.மாவட்டச் செயலருக்கும் பனை அபிவிருத்திச் சபையின் தலைவர் கலாநிதி கிருஷாந்த பத்திராஜ உள்ளிட்ட அதிகாரிகளுக்கு இடையிலான கலந்துரையாடலொன்று யாழ்.மாவட்டச் செயலகத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்றபோதே இவ்வாறு உறுதியளித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

கூட்டுறவுச் சங்கங்களின் மாதாந்த எரிபொருள் தேவையை யாழ்.கூட்டுறவுச்சங்க குழுவின் ஊடாக பனை அபிவிருத்திச் சபைக்கு சமர்ப்பித்து, பனை அபிவிருத்திச் சபையின் அனுமதியுடன் யாழ்.மாவட்டச் செயலரிடம் சமர்ப்பிக்கவேண்டும்.

அதன்பின்னர் மாவட்டச் செயலரின் அனுமதியுடன், மாவட்டச் செயலர் அலுவலகத்தால் இலங்கைப் போக்குவரத்துச் சபைக்கு அனுப்பப்படும். அதற்கமைய கூட்டுறவுச் சங்கங்களுக்கு எரிபொருள் விநியோகிக்கப்படும் -என்றார். (ஒ-14)

வவுனியாவில்

குடும்பத்தலைவர் வெட்டிக்கொலை; ஆறு பேர் கைது

வவுனியா - ஆச்சிபுரம் பகுதியில் இளம் குடும்பத்தலைவர் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் ஆறு பேர் கடந்த செவ்வாய்க்கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வவுனியா - ஆச்சிபுரம் பகுதியில் இரு குழுக்களிடையில் ஏற்பட்ட மோதலில் அதே பகுதியைச் சேர்ந்த 30 வயதுடைய குடும்பத் தலைவர் கட்டுத்துப்பாக்கியால் சுடப்பட்டும் வாள்வெட்டுக்கு இலக்காகியும் உயிரிழந்திருந்தார்.

இந்த நிலையில் குறித்த சம்பவம் தொடர்பில் பொலிஸார் முன்னெடுத்த விசாரணைகளில் சம்பவத்துடன் தொடர்புடையதாகச் சந்தேகிக்கப்படும் தந்தை, மகன் உள்ளிட்ட ஆறுபேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

அவர்களிடமிருந்து தாக்குதலுக்கு பயன்படுத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்படும் இடியன் துப்பாக்கியும் வாள்களும் பொலிஸாரால் மீட்கப்பட்டன.

கைதுசெய்யப்பட்டவர்களை மேலதிக விசாரணைகளின் பின்னர் நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ச-110)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருடர்கள் அதிகம் மக்களே அவதானம்!

மீசாலை வடக்கு மற்றும் இராமாவில் கிராம அலுவலர் பிரிவுகளில் கடந்த சில நாள்களாக திருடர்களின் நடமாட்டம் அதிகரித்துள்ளது. இதனால் அந்தப்பகுதி மக்களை அவதானமாக இருக்குமாறு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மீசாலை - புத்தூர்ச்சந்திப் பகுதியில் கடந்த செவ்வாய்க் கிழமை இரவு 11 மணியளவில் உலாவிய திருடன் பொது மக்களால் பிடிக்கப்பட்டு கொடிகாமம் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளான்.

இந்த நிலையில் எந்த நேரமும் திருட்டுச் சம்பவங்கள் இடம்பெறலாம் என்பதால் மக்களை அவதானத்துடன் செயற்படுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

(ஒ-14-159)

வவுனியாப் பல்கலைக்கழகத்தில் மருத்துவபீடம் அமைக்கத் திட்டம்

வவு.பல்கலை துணைவேந்தர் தெரிவிப்பு

வவுனியா, ஓக. 5

வவுனியாப் பல்கலைகழகத்தில் மருத்துவபீடம் ஒன்றை அமைப்பதற்கான திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது. அதற்கான முன்மொழிவு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அனுமதிக்காக சமர்ப்பிக்கப்படவுள்ளது என்று வவுனியாப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் ரி.மங்களேஸ்வரன் தெரிவித்தார்.

வவுனியாப் பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்டு கடந்த திங்கட்கிழமை ஒரு வருடம் நிறைவுற்றதை முன்னிட்டு இடம்பெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பிலேயே இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

வவுனியா வளாகமாக இருந்த எமது நிறுவனம் தனிப் பல்கலைக்கழகமாக தரமுயர்த்தப்பட்டு இன்றுடன் (கடந்த திங்கட்கிழமை) ஒரு வருடம் கடந்துள்ளது.

இந்தக் காலப்பகுதியில் பல்வேறுபட்ட சவால்களுக்கு மத்தியில் பல விடயங்களில் முன்னேற்றம் அடைந்துள்ளோம்.

அந்த வகையில் நல்லிணக்க மையம் ஒன்றை உருவாக்கியுள்ளோம்.

சர்வதேசத்தைச் சேர்ந்த மாணவர்களும் இங்கு வந்து கற்கைநெறிகளை பயில்வதற்கான நடவடிக்கையை முன்னெடுத்துள்ளோம். விசேட தேவையுடையோர்களுக்கான அலகொன்றை ஆரம்பித்து அவர்களுக்குத் தேவையான அனுசரணை வழங்கும் செயற்பாடுகளை முன்னெடுத்திருக்கிறோம். அத்துடன் கலாசார நூதனசாலை ஒன்றை அமைப்பதற்கான நடவடிக்கையும் எடுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அனைத்துத் துறைகளும் முன்னெடுக்கப்பட்டுவரும் வேளையில் மருத்துவபீடம் ஒன்றை அமைப்பதற்கான முன்மொழிவை எமது மூதவையும் பேரவையும் ஏற்றுக்கொண்டுள்ளன.

தற்போது அதற்கான திட்டமுன்மொழிவை பல்கலைகழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு அனுப்பவுள்ளோம். இதன் மூலம் வவுனியா மாவட்ட பொது மருத்துவமனையையும் ஒரு போதனா மருத்துவமனையாக தரமுயர்த்துவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளோம்.

பல்கலைகழக மானியங்கள் ஆணைக்குழுவால் எமது திட்ட அறிக்கை அனுமதிக்கப்பட்டவுடன் அதன் நிர்மாணப்பணிகள் ஆரம்பிக்கப்படும்.

குறிப்பாக எதிர்வரும் சில வருடங்களுக்குள் மருத்துவபீடத்தை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளோம்.

மேலும் பல துறைகளில் பல்வேறு பட்ட கற்கைநெறிகளை உருவாக்குவதற்கும் திட்டமிட்டுள்ளோம். அதில் குறிப்பிடப்பட்ட சில கற்கைநெறிகள் ஆரம்பிப்பதற்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அனுமதித்துள்ளது -என்றார்.

(எ-14-110)

Ministry of Agriculture | Northern Provincial Council | THE WORLD BANK IBRD • IDA | WORLD BANK GROUP

INVITATION FOR BIDS

National Competitive Bidding

MINISTRY OF AGRICULTURE & AGRARIANSERVICES, ANIMAL HUSBANDRY, IRRIGATION, FISHERIES, WATER SUPPLY AND ENVIRONMENT – NORTHERN PROVINCE.

01. The Democratic Socialist Republic of Sri Lanka has received a credit under Contingent Emergency Response Component (CERC) to support Agricultural Crop production to ensure food security during COVID -19. Ministry of Agriculture intends to proceed of this credit to eligible payments under the contract of construction of storage facilities for small scale farmers in island wide.

02. The Secretary of Ministry Of Agriculture & Agrarian Services, Animal Husbandry, Irrigation, Fisheries, Water Supply And Environment – Northern Province invites sealed bids from eligible and qualified Bidders for "Construction of storage facilities for small scale farmers" in Vavuniya and Mannar Districts.

03. Bidders are allowed to quote for the below works with the Bid security given by a Commercial Bank operating in Sri Lanka with the valid date until 2nd December 2022 for above procurements. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered in the field of Construction (works) for the grade mentioned in the table below with the Construction Industry Development Authority (CIDA).

04. Bidding will be conducted through the National Competitive Bidding Procedure (NCB) approved by the World Bank.

Lot. No	Title of Contract	Proposed Contract Price (Rs.Mn)	Bid Security Amount (Rs)	Construction Period	Required CIDA Grade
	Mannar District				
1.	Reconstruction of Warehouse with a capacity of 100MT for storage of other field crops in Kalmadu, Vavuniya Range.	16.575	190,000.00	75 Days	C6 & C5 Building
2.	Reconstruction of Warehouse with a capacity of 100MT for storage of other field crops in Periyamadu, Vavuniya Range.	15.807	190,000.00	75 Days	C6 & C5 Building
	Vavuniya District				
3.	Reconstruction of Warehouse with a capacity of 100MT for storage of other field crops in Pampaimadu, Vavuniya Range.	18.864	220,000.00	75 Days	C6 & C5 Building
4.	Reconstruction of Warehouse with a capacity of 100MT for storage of other field crops in Nedunkeney, Vavuniya Range.	20.524	240,000.00	75 Days	C6 & C5 Building

05. Interested eligible Bidders may obtain further information from the Provincial Director's Office, Department of Agriculture - Northern Province, 68, Crossette Lane, Chundikuli, Jaffna and inspect the bidding documents at the same place on 5th August 2022 to 18th August 2022 from 09.00 hrs, to 15.00 hrs.

06. A complete set of Bidding documents in English language may be purchased by eligible bidders on the submission of a written application to the Provincial Director, Department of Agriculture - Northern Province, 68, Crossette Lane, Chundikuli, Jaffna from 5th August 2022 until 18th August 2022 from 09.00 hrs, to 15.00 hrs, upon payment of a non-refundable fee of Rs.3,500.00. The method of payment should be in cash.

07. Bids should be delivered through registered post or to be handed over to the Provincial Director's Office, Department of Agriculture - Northern Province, 68, Crossette Lane, Chundikuli, Jaffna on or before 14.30 hrs, on 19th August 2022. Electronic bidding will not be permitted. Late Bids will not be accepted. Bids will be opened in the presence of the bidders or bidders' representative who choose to attend in person at the above address at 14.30 hrs, on 19th August 2022.

08. Bids should be valid up to 4th November 2022.

Completed bids should be forwarded in two copies as the Original and the Duplicate. The original and the duplicate should be enclosed separately and marked as the 'Original' and 'Duplicate' respectively in sealed envelopes. Both envelopes enclosed in a sealed single envelope and marked the "Name of Work as stated in the above table" on top left – hand corner of the envelope.

09. Pre-bid meeting will be held on 15th August 2022 at 10.30 hrs, at the Provincial Director's Office, Department of Agriculture - Northern Province, 68, Crossette Lane, Chundikuli, Jaffna.

Secretary
Ministry Of Agriculture & Agrarian Services, Animal Husbandry, Irrigation, Fisheries, Water Supply And Environment – Northern Province
No. 655, Navalar Road,Jaffna
Date : 04.08.2022

மடு பெருவிழாவுக்கான முன்னாயத்தக் கூட்டம்

எதிர்வரும் 15 ஆம் திகதி நடைபெறவுள்ள மடுமாதா ஆலயப் பெருவிழாவுக்கான முன்னாயத்தக் கலந்துரையாடல், மன்னார் மாவட்டச் செயலகத்தில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றது.

இந்தமாத பெருவிழாவுக்கு குறைந்தது நான்கு லட்சத்துக்கும் மேற்பட்ட பக்தர்கள் கலந்துகொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.

திருவிழாவை முன்னிட்டு ஏற்கனவே மடுத் திருத்தலத்திலுள்ள 380 வீடுகளும் பக்தர்களால் பதிவு செய்யப்பட்டுள்ளன. 200 க்கும் மேற்பட்டவர்கள் வீடுகளுக்காக விண்ணப்பித்திருக்கின்றனர் என்று மடு பரிபாலகர் அருட்பணி பெப்பி சோசை அடிகளார் தெரிவித்தார். அத்துடன் தற்போது ஓரிரு குடும்பங்கள் மடுவுக்கு வரத் தொடங்கியுள்ளதுடன் கூடாரங்கள் அமைத்து தங்கவும் ஆரம்பித்துள்ளன எனவும் பெப்பி சோசை அடிகளார் தெரிவித்தார்.

திருவிழாவுக்கு வருபவர்களுக்கான உணவுகள், போக்குவரத்து, குடிதண்ணீர், சுகாதாரம், மின்சாரம், பாதுகாப்பு போன்ற சகல வசதிகளும் கடந்த காலங்களைப் போன்று மேற்கொள்ள கூட்டத்தில் தீர்மானம் எடுக்கப்பட்டது.

மடு ஆலயப் பகுதிக்குள் ஒழுக்க சீர்கேடுகள் நடைபெறாதிருக்கும் முகமாக பலத்த பாதுகாப்புகள், கண்காணிப்புகள் மேற்கொள்ளப்பட வேண்டிய அவசியம் சுட்டிக்காட்டப்பட்டது.

கடந்த ஆடி மாத பெருவிழா வின்போது அனைத்து சேவைகளுக்கும் ஒத்துழைப்பு வழங்கிய சகல திணைக்களங்களும் மிகவும் திறமையாக செயற்பட்டமைக்கு நன்றி தெரிவிக்கப்பட்டது.

இந்த முறையும் அவ்வாறே அனைத்து திணைக்களங்களும் சிறந்த முறையில் செயற்படவேண்டும் எனவும் மேலும் திருவிழாவுக்கான இறுதிக் கலந்துரையாடல் எதிர்வரும் 9 ஆம் திகதி மடு ஆலய பரிபாலகரின் கேட்போர் கூடத்தில் நடத்தப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது. (எ-14-60)

மோ.சைக்கிள் மோதி 3 பேர் படுகாயம்!

யாழ்ப்பாணம், ஓக.5

மோட்டார் சைக்கிள்கள் நேருக்கு நேர் மோதியதில் மூவர் படுகாயமடைந்தனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்துச்சம்பவம் மானிப்பாய் சந்தியில் கடந்த திங்கட்கிழமை இரவு நடந்துள்ளது.

விபத்தில் காயமடைந்தவர்கள் யாழ். போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். காயமடைந்த மூவரில் ஒருவரின் நிலை கவலைக்கிடமாகவுள்ளது என்று மருத்துவமனைத் தகவல்கள் தெரிவித்துள்ளன.

(எ-14-27)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

அரசாங்க உத்தியோகம் தோல்வியான பொறிமுறை

கொழும்பு, ஓக. 5

இற்றைக்கு நான்கு அல்லது ஐந்து தசாப்தங்களுக்கு முன்னர் அரச தொழில்முயற்சிகள் தொடர்பில் பொருளாதார எண்ணக்கருவொன்று இருந்தது. ஆனாலும் அது தோல்வியான மற்றும் வினைத்திறனற்றதென்பதை தற்போது முழு உலகமும் ஏற்றுக்கொண்டுள்ளது என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

'சோசலிச நாடுகளான சீனா மற்றும் வியட்நாம் போன்ற நாடுகளும் தற்போது அரச தொழில்முயற்சிகளை செயற்படுத்துவதில்லை. நாம் மேலும் பண்டைய எண்ணக்கருக்களில் தங்கிநின்றால் எமது நாடு மேலும் கீழ்நோக்கிச் செல்வதைத் தடுப்பதற்கு யாருக்கும் முடியாமல் போகும். இவ்வாறு நட்டமடையும் அரச முயற்சிகளை முன்னெடுத்துச் செல்வது எவ்வாறு என்பதுபற்றி நாம் கொள்கைரீதியான தீர்மானங்களை எடுக்கவேண்டிவரும்' என்று தனது அக்கிராசன உரையில் ரணில் குறிப்பிட்டார்.

பொருளாதாரப் பலசாலிகள் நாம்

இற்றைவரை உலகத்தில் பொருளாதார வல்லமை கொண்ட நாடுகளாக மேற்குலக நாடுகளே இருந்தன. 21 ஆம் நூற்றாண்டு முடிவடைவதற்கு முன்னதாக உலகத்தில் வலுவான பொருளாதாரம் இந்து சமுத்திரப் பிராந்தியத்துக்கு உரித்தாகும். அவ்வாறான பின்புலத்தில் எமது நாட்டின் புவிசார் அமைவு மிகவும் முக்கியமானதாகும். நாம் இந்த இலாபகரமான அமைவின் உச்சப் பயனை பெற்றுக்கொள்ள வேண்டும்.

தினந்தோறும் கடன் பெற்றுக்கொள்வதன்மூலம் நாட்டை முன்கொண்டு செல்ல எம்மால் முடியாது. ஆகையால் இந்து சமுத்திர கேந்திர புதிய பொருளாதார வலுவினால் எமது நாட்டுக்கு உச்சபட்ச பயனை பெற்றுக்கொள்ளக்கூடிய சட்டதிட்டங்கள் மற்றும் கொள்கைகளை நான் உங்களோடு சேர்ந்து வகுப்பேன் - என்று குறிப்பிட்டார். (ஒ.5)

எமக்கு எதிராளிகளாக எந்த நாடும் இல்லை

வெளிநாட்டுக் கொள்கை தொடர்பில் ரணில்

கொழும்பு, ஓக. 5

'எமது நாட்டின் வெளிநாட்டுக் கொள்கை தொடர்பில் விசேடமாகக் குறிப்பிட நான் விரும்புகின்றேன். வெளிநாட்டுக் கொள்கையில் உறுதியற்ற தன்மை காரணமாக எமக்கு சர்வதேச மட்டத்தில் அதிகளவிலான இழப்பீடுகள் மற்றும் பின்னடைவுகள் ஏற்பட்டன.

நான் இந்த நிலைமையை மாற்றுவேன். உலகத்தில் சகல நாடுகளும் எனது நண்பர்கள். எமக்கு எதிராளிகள் இல்லை. நாம் எந்தவொரு கட்சியையும் சேர்ந்தவர்கள் அல்லர். சகல நாடுகளோடும் நட்புரீதியான கொள்கையைப் பின்பற்றுவதனை நான் உறுதிப்படுத்துகின்றேன்' -என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது கொள்கை விளக்க உரையில் நேற்றுமுன்தினம் குறிப்பிட்டார். (ஒ-5)

மஹிந்த தரப்புக்கு எதிராக ரணில் சட்ட நடவடிக்கை?

கொழும்பு, ஓக. 5

மே 9 ஆம் திகதி அமைதியான போராட்டக்காரர்கள் மீது தாக்குதல் நடத்திய நபர்கள் மற்றும் போராட்டத்தின் பெயரில் வன்முறை மற்றும் பயங்கரவாதத்தை பரப்பும் நபர்கள் குறித்தும் சட்டத்தை நடைமுறைப்படுத்துவேன். இந்தச் செயற்பாட்டின்போது எந்த ஓர் அரசியல் அழுத்தமும் இடம்பெறாத வகையில் பொறுப்புக்கூறுவேன் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

மே 9 ஆம் திகதி போராட்டக்காரர்கள் மீது, அப்போதைய பிரதமர் மஹிந்த ராஜபக்சவின் கூட்டத்தில் கலந்து கொண்டவர்கள் தாக்குதல் நடத்தியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-5)

முதலீடுகளுக்கு எதிர்ப்பு படுமோசமான செயற்பாடு

மஹிந்த தரப்பை மறைமுகமாக சாடினார் ரணில் விக்கிரமசிங்க

கொழும்பு, ஓக. 5

அதிக வட்டிக்கு வர்த்தகக் கடன்களைப் பெற்றுக் கொள்ளும்போது அமைதியாகப் பார்த்திருந்த சில குழுக்கள் நாட்டுக்கு பொருத்தமான முதலீடுகளுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கின்றனர். பொய்யான பலிக்கடாக்களை உருவாக்கி மக்களை திசைதிருப்புகின்றார்கள் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க காட்டமாகத் தெரிவித்தார்.

அவர் தனது அக்கிராசன உரையில் இது தொடர்பில் மேலும் குறிப்பிடுகையில்;

யாரேனும் சொல்வதை ஆராய்ந்து பார்க்காமல், ஏற்றுக்கொண்டுவிட்டு, வெளிநாட்டு முதலீடுகளுக்கு எதிர்ப்புத் தெரிவிப்பதனால் எமது நாட்டுக்கு ஏற்பட்ட இழப்பை அளவிட முடியாது. ஊழல் மற்றும் மோசடி ஊடாக நாட்டின் நிதி மற்றும் வளங்களைக் களவாடியதனால் நாட்டுக்கு ஏற்பட்ட இழப்புகள்பற்றி மக்கள் அறிவார்கள். ஆனாலும் பொய்ப் பலிக்கடாக்களை எடுத்துக்காட்டி வெளிநாட்டு முதலீடுகளைத் தடை செய்து நாட்டுக்கு ஏற்படுத்திய இழப்பு கணக்கிட முடியாத அளவுக்கு விசாலமானதாகும்.

உதாரணங்கள்

இந்தியாவோடு ஒன்றிணைந்து திருகோணமலை எண்ணெய்த்தாங்கித் தொகுதியை அபிவிருத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கும்போது இந்தியாவுக்கு இலங்கையை விற்கின்றார்கள் என்று கூறி அபிவிருத்தித் திட்டத்துக்கு இடையூறு விளைவித்தனர். அன்று எமக்கு எண்ணெய்த்தாங்கித் தொகுதியை அபிவிருத்தி செய்து கொள்வதற்குச் சந்தர்ப்பம் கிடைத்திருப்பின் இன்று மக்கள் எரிபொருள் வரிசைகளில் நீண்டநாள்கள் அலைவதற்கு அவசியம் ஏற்பட்டிருக்காது.

'சுவசெரிய அம்புலன்ஸ்' சேவையை ஆரம்பிக்கும்போது அதேபோன்று எதிர்ப்புகளைச் செய்தார்கள். ஆனாலும் நாம் 'சுவசெரியவை' ஆரம்பித்ததனால் தற்போது பல்லாயிரக்கணக்கான உயிர்கள் பாதுகாக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு குறுகிய அரசியல் நோக்கங்களுக்காக மக்களை வழிதவறி நடத்தி தடைசெய்த கருத்திட்டங்கள் காரணமாக எமது பொருளாதாரக் கட்டமைப்பு அழிவடைந்தது.

இலகு புகையிரதச் சேவையைத் ஸ்தாபிப்பதற்கும், துறைமுகத்தை மேம்படுத்துவதற்கும் ஜப்பான் நாடு முன்வந்த சந்தர்ப்பத்தில் அதற்கெதிராக அடிப்படையற்ற வீணான காரணிகள் பலவற்றை எடுத்துக்காட்டியதன் காரணமாக எமது நாட்டுக்குக் கிடைப்பதற்கிருந்த 3 பில்லியன் டொலருக்கு அதிகமான அளவு கிடைக்காமல் போயிற்று. அதுமட்டுமன்றி ஜப்பான் மற்றும் இலங்கைக்கிடையே இருந்த நீண்டகால நட்பு சிதறிப்போனது - என்று குறிப்பிட்டார்.

இத்தகைய எதிர்ப்பு நடவடிக்கைகளில் மஹிந்த ராஜபக்ச ஆதரவு தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களே ஈடுபட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-5)

போராட்டக்காரர்களை பாதுகாக்க விசேட செயலணி அமைப்பேன்

போராடுவதற்காக இரண்டு இடங்களை அறிவித்தார் ரணில்

கொழும்பு, ஓக.5

அமைதியான போராட்டக்காரர்களுக்கு எந்தவொரு வகையிலும் பாதிப்பை ஏற்படுத்த இடமளிக்கப்போவதில்லை. அமைதியான போராட்டக்காரர்களைப் பாதுகாக்க நான் விசேட செயலணியொன்றை நிறுவுவேன் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உறுதியளித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் ஆற்றிய அக்கிராசன உரையிலேயே இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அரசியல்வாதிகளில் மக்களுக்கு நம்பிக்கையில்லை

அரசியல் முறைமை மற்றும் அரசியல்வாதிகள் தொடர்பான மக்களது நம்பிக்கை அற்றுப்போய்விட்டது. அரசியல் பொறிமுறை தொடர்பான மக்களது எதிர்பார்ப்புகள் உடைந்து போயுள்ளன. கடந்தகாலம்பூராகவும் எதிர்ப்பில் ஈடுபட்ட மக்கள் இந்த முறைமைத்தொகுப்பின் மாற்றத்தை கேட்டு நின்றது அதற்காகத்தான்.

ஆட்சி முறையில் மாற்றமொன்றை ஏற்படுத்தும் நோக்கில், நாடு பூராக ஆங்காங்கே ஆரம்பிக்கப்பட்ட போராட்டங்களுக்கு பிற்காலத்தில் காலிமுகத்திடல் கேந்திரமானது. நாட்டின் பிரதான நகரங்கள் சிலவற்றுக்கும் அது வியாபித்திருந்தது. இந்தப் போராட்டமானது மிகவும் அஹிம்சையாகவும் ஆக்கபூர்வமாகவும் இடம்பெற்றது. இந்தப்போராட்டக்காரர்கள் எந்தவொரு வன்முறைகளிலும் ஈடுபடவில்லை. அதன் காரணமாகவே குடும்பம் குடும்பமாக வந்து போராட்டத்துக்கு ஒத்துழைப்பு வழங்கினர். சிறு குழந்தைகளையும் போராட்டப் பூமிக்கு அழைத்து வருவதற்கு பெற்றோர் அச்சம் கொண்டிருக்கவில்லை.

வன்முறையாகியது

ஒரு சந்தர்ப்பத்தில் போராட்டக்காரர்கள் ஜனாதிபதி செயலகத்தின் சுவர்களில் சித்திரம் வரைந்தனர். ஆனால் எந்தவிதமான பாதிப்பும் இல்லாதவாறு டிஜிட்டல் முறையில். ஆனால் அதன்பின்னர் இந்தப்போராட்டத்தில் அஹிம்சாவாதம் கீழ்ப்படிந்து வன்முறை மேலெழுந்தது. ஒரு சில குழுக்கள் போராட்டத்தின் ஒற்றுமையை மிதித்து போராட்டத்தின் உரிமையாளர்களாக மாறினர். அவர்கள் அன்புக்குப் பதிலாக போராட்டத்தில் வன்முறையைத் திணித்தனர்.

நான் ஒருபோதும் வன்முறை மற்றும் பயங்கரவாதத்துக்கு இடமளிக்கமாட்டேன். ஆயினும் அஹிம்சை மற்றும் ஜனநாயகத்தைப் பாதுகாப்பேன்.

விசேட செயலணி

நான் இந்தப் போராட்டக்காரர்களை வேட்டையாடப் போவதாக பரப்புரையை சில குழுக்கள் சமூக ஊடகங்களின் வாயிலாக பரப்ப முயற்சித்து வருகின்றனர். ஆயினும் அது உண்மையல்ல. அமைதியான போராட்டக்காரருக்கு அநீதி விளைவித்தால் செயலணிக்கு 24 மணித்தியாலத்தில் எந்த ஒரு நேரத்திலும் முறைப்பாடு செய்ய முடியும். அவ்வாறான அறிவித்தல்கள் குறித்து விசாரித்து தேவையான நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு ஓய்வு பெற்ற நீதிபதி ஒருவரின் தலைமையில் குழுவொன்றை நிறுவுவேன்.

போராட்டக்களம்

அமைதியான முறையில் எதிர்ப்பினைத் தெரிவிப்பதற்காக கொழும்பு மாநகர சபை மற்றும் கண்டி மாநகர சபை என்பவற்றில் இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. அந்த இடங்களில் எதிர்ப்புத் தெரிவிக்கின்ற போராட்டக்காரர்களுக்குத் தேவையான வசதிகளை வழங்குவதற்கு மாநகரசபை நடவடிக்கை எடுக்கும். எனவே நான் மிகவும் விநயமாக வேண்டிக்கொள்வது அத்துமீறிய இடங்களில் தொடர்ந்தும் தங்கியிருக்கவேண்டாம் என்பதாகும். எனவே அவ்வாறான அத்துமீறிய இடங்களிலிருந்து வெளியேறி, சட்டத்தையும் ஒழுங்கையும் பாதுகாப்பதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறு அமைதியான போராட்டக்காரர்களிடம் வேண்டுகோள் விடுக்கின்றேன். இலங்கை தேசத்தைக் கட்டியெழுப்புவதற்காக உங்களது ஒத்துழைப்பை எதிர்பார்க்கின்றேன் - என்றார். (ஒ-5)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மரண அறிவித்தல்

அன்னையின் மடியில்
04 - 01 - 1948

ஆண்டவன் அடியில்
04 - 08 - 2022

திரு. இராசையா நடராஜசுந்தரம்

(களஞ்சிய உத்தியோகத்தர் – காங்கேசன்துறை சீமெந்துக்கூட்டுத்தாபனம்)

புலோலி - பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும் மணியகாரன் வீதி, தெல்லிப்பளையை வதிவிடமாகவும், ஆனைக்கோட்டை வீதி - கொக்குவில் மேற்கு, கொக்குவிலை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட திரு. இராசையா நடராஜசுந்தரம் அவர்கள் நேற்று (04.08.2022) வியாழக்கிழமை அதிகாலை இறைவனடி சேர்ந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசையா - பாக்கியலட்சுமி தம்பதிகளின் ஏக புதல்வனும் பாலகிருஸ்ணர் - மகேஸ்வரி தம்பதிகளின் அன்பு மருமகனும், இந்திராணியின் (ஓய்வுநிலை பிரதம எழுதுநர் - நல்லூர் பிரதேச செயலகம்) அன்புக் கணவரும், வாணி (இலங்கை வங்கி - கைதடி), சங்கீதா (பிரதேச சபை - வலி. வடக்கு) ஆகியோரின் அன்புத் தந்தையாரும், ஜெயலட்சுமி, இரஞ்சிதமலர், கமலேஸ்வரி, இராஜேஸ்வரி, சோதிமலர், பத்மாவதி ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற நிர்மலராணி, இராஜசேகரன், காலஞ்சென்ற சந்திரசேகரன், ஞானசேகரன், இரஞ்சிதராணி, சிவபாலசேகரன், விஜயராணி, தேவிகாராணி, உதயசேகரன், சர்மிளா ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.08.2022) வெள்ளிக்கிழமை கொக்குவில் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 2.00 மணியளவில் கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் :
மனைவி, பிள்ளைகள்
குடும்பத்தினர்

ஆனைக்கோட்டை வீதி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

076 069 6220

(CS 20195) (3/6)

அதிவேக சாலையில் நுழையமுன் எரிபொருள் அளவை பரிசீலிக்குக!

வீதி அபிவிருத்தி அதிகார சபை வேண்டுகோள்

கொழும்பு, ஓக 5

அதிவேக நெடுஞ்சாலையில் நுழைவதற்கு முன்னர் வாகனச்சாரதிகள் எரிபொருளின் அளவை பரிசீலிக்குமாறு வீதி அபிவிருத்தி அதிகார சபை கோரியுள்ளது.

இதுதொடர்பில் வீதி அபிவிருத்தி அதிகார சபை பணிப்பாளர் நாயகம் மேலும் தெரிவித்ததாவது:-

எரிபொருள் இல்லாமையால் அதிவேக நெடுஞ்சாலையில் வாகனங்கள் இடைநடுவில் நிற்கும் சம்பவங்கள் குறித்து பராமரிப்புப் பிரிவினருக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

அதிவேக நெடுஞ்சாலைகளில் நிறுத்தப்படாமல், மற்ற வாகனஓட்டிகளுக்கு சிரமத்தை ஏற்படுத்தாமல் பயணிக்கப் போதுமான எரிபொருள் உள்ளதா என்பதை வாகனச் சாரதிகள் முதலில் அளவிடவேண்டும்.

எரிபொருள் தட்டுப்பாடு உள்ளிட்ட பல்வேறு சிரமங்களுக்கு மத்தியிலேயே பராமரிப்புப் பிரிவும் இயங்குகின்றது.

விபத்து ஏற்படும் சந்தர்ப்பத்தில் குறித்த இடத்தை அடைவதற்கும் மட்டுப்படுத்தப்பட்ட எரிபொருள் வளங்களைப் பயன்படுத்தி நிலைமையைக் கட்டுப்படுத்துவதற்கும் தாமதம் ஏற்படும்.

எனவே வாகனச் சாரதிகள் வாகனத்தின் தரம் மற்றும் பயணத்துக்கான எரிபொருள் அளவு ஆகியவற்றை பரிசீலித்தபின் அதிவேக நெடுஞ்சாலையில் நுழையுங்கள்- என்றார். (ச-இ)

விற்பனைக்கு

லயன் செப்பெட் நாய்க்குட்டிகள்
(ஆண்) விற்பனைக்கு
074 300 8290

தவறிவிட்டது

கோண்டாவிலில் இருந்து யாழ். நகர்பகுதி சென்ற போது யாழ் நகர் பகுதியில் இரண்டு சோடி அலுமாரி திறப்புகளுடன் கைபேர்ஸ் தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

(CS 20193) (3/6)

077 266 6271, 077 903 7292

REQUIRE
SHIPS STAFF
Above 10,000 grt tankers
all Officers / Engineers for
Fleet vessels over 10 tankers
Asian Lanka Shipping pvt Ltd.
34-B,Frankfurt Place,Colombo-04.
Email : als@webstation.lk
Call : 0777518879

கேள்வி அறிவித்தல்.

வாகன சுத்திகரிப்பு சேவை 2022-2023
பணிப்பாளர் மாவட்டப்பொது
வைத்தியசாலை, கிளிநொச்சி

01. தலைவர், பிராந்திய பெறுகைக்குழு, மாவட்டப்பொது வைத்தியசாலை, கிளிநொச்சி அவர்கள், கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள கிளிநொச்சி மாவட்டப் பொது வைத்தியசாலைக்கு 2022-2023 ஆம் ஆண்டிற்கான வாகன சுத்திகரிப்பு சேவைக்கு இப்போது தகவுடையோரும் தகைமைபெற்றவருமான கேள்வியாளர்களிடம் இருந்து குறியீடு செய்யப்பட்ட விலைக்கேள்விகளைக் கோருகின்றார்.

விடயம்	குறியீட்டு இலக்கம்	வாகனங்களின் எண்ணிக்கை	சேவைக் காலம்	மீளளிக்கப்படாத வைப்புத் தொகை (ரூபா)	மீளளிக்கப்படும் வைப்புத் தொகை (ரூபா)	மீளளிக்கப்படும் வைப்புத் தொகைக்கான காலம்
வாகன சுத்திகரிப்பு சேவை	NP/04/45/DG H/KOC /VS/2022/01	07	ஒரு வருடம்	2,500.00	10,000.00	22.08.2022-19.09.2022

02. விலைக்கேள்வியானது தேசிய போட்டி கேள்வியின் (NCB) மூலம் நடாத்தப்படும்.

03. விலைக் கேள்விதாரர்கள் உரிய வகையிலான வியாபார பதிவுடையவராகவும், கறுப்புப் பட்டியலில் பெயர் இடம் பெறாதவராயிருத்தலும் வேண்டும்.

04. தகைமைகள் பற்றிய தேவைப்பாடுகள் கேள்வி ஆவணத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

05. அக்கறை கொண்டுள்ள கேள்வியாளர்கள் மாவட்டப்பொது வைத்தியசாலை கிளிநொச்சி, A9 வீதி, கிளிநொச்சி, (தொலைபேசி இல 0212285329/0212284111) அவர்களிடமிருந்து மேலதிக தகவலைப்பெறலாம் என்பதுடன், இம் முகவரியில் காலை 09.00 மணியிலிருந்து பிற்பகல் 15.00 மணிவரை கேள்வி ஆவணங்களை பரிசோதனை செய்யலாம்.

06. அக்கறை கொண்டுள்ள கேள்வியாளர்களினால் ஆங்கில மொழியிலான கேள்வி ஆவணங்களின் பூரணமான தொகுதியொன்றை மாவட்டப்பொது வைத்தியசாலை கிளிநொச்சி ,A9 வீதி, கிளிநொச்சி எனும் முகவரியில் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றை சமர்ப்பித்து 05.08.2022 திகதி முதல் 22.08.2022ம் திகதி வரை மு.ப 09.00 மணி தொடக்கம் பி.ப 15.00 மணி வரையான காலப்பகுதியில் மேலே அட்டவணையில் கூறப்பட்டுள்ள மீளளிக்கப்படாத தொகையினை கட்டணமாக செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.

07. கேள்விகள் 22.08.2022 திகதியன்று முற்பகல் 10.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் தலைவர், பிராந்திய கேள்விச்சபை, மாவட்டப்பொது வைத்தியசாலை கிளிநொச்சி ,A9 வீதி, கிளிநொச்சி எனும் முகவரியில் நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ இரு பிரதிகளில் ஒப்படைத்தல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விதாரர்கள் குறியீட்டு இலக்கத்தினை தபாலுறையின் இடது மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும். நேரடியாக கீழேயுள்ள முகவரியில் வருகை தரவிரும்பும் கேள்வியாளர்களின் பிரதிநிதிகளது சமூகத்தில் முடிவுறுத்தல் காலத்தின் பின் உடனடியாக கேள்விகள் திறக்கப்படும்.

08. மேலே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு கேள்விப் பிணைப்பணம் (Bid Security) செலுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

09. இவ் விலைமனுக்கோரலை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ அல்லது எந்தவொரு நிலையிலுமோ இப்பூரண நடவடிக்கையிலிருந்து எவருக்கும் நட்டஈடு எதுவும் செலுத்தாமலே இவ்விலைமனுகோரலை இரத்து செய்வதற்கு பெறுகைக்குழு தலைவருக்கு பூரண அதிகாரம் உண்டு.

தலைவர்,
பிராந்திய பெறுகைக் குழு,
மாவட்டப்பொது வைத்தியசாலை கிளிநொச்சி

(CR 36894) (3/6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணீர் அஞ்சலி

வலிகாமம் வடக்கு பிரதேசசபையில் கடமையாற்றும்
நடராஜசுந்தரம் சங்கீதா
அவர்களின் அன்புத் தந்தை

இராசையா நடராஜசுந்தரம்

நேற்று (04.08.2022) வியாழக்கிழமை இறைபதம் அடைந்தார். அவர்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதுடன் அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஊழியர் நலன்புரி சங்கம்,
வலிகாமம் வடக்கு பிரதேச சபை, காங்கேசன்துறை.

31ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்
28 - 02 - 1950

மறைவு
06 - 07 - 2022

கடந்த 06.07.2022 புதன்கிழமை சிவபதமடைந்த
எங்கள் குடும்பத் தலைவர்

அமரர் வல்லிபுரம் தம்பிராசா

(முன்னாள் முகாமையாளர் ஆனந் மோட்டோஸ்,
விஜிதா மோட்டோஸ்)

அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு இன்று (05.08.2022) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்களைக் கேட்டுக் கொள்கின்றோம்.

26/5, பிரம்படி லேன்,
கொக்குவில்

குடும்பத்தினர்

(CS 20185) (3/6)

நல்லூர் மஹோற்சவத்தையொட்டி மாணவரிடையே கட்டுரைப்போட்டி

யாழ்ப்பாணம், ஓக. 5

நல்லூர் சைவத் தமிழ்ப் பண்பாட்டுக் கலைக்கூடல் அமைப்பால் நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த மஹோற் சவத்தை முன்னிட்டு எதிர்வ ரும் 9ஆம் திகதி காலை 9 மணிக்கு யாழ். கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தில் கட்டுரைப்போட்டி நடைபெறவுள்ளது.

சைவம், தமிழ், பண்பாட்டு கலாசார விழுமியங்களை பறைசாற்றும் வகை யில் யாழ்ப்பாணக் கல்வி வலயப் பாட சாலை மாணவர்களிடையே இந்தக் கட்டுரைப் போட்டி நடத்தப்படவுள்ளது.

இதில் தரம் 6,7, 8 கனிஷ்ட பிரிவைச் சேர்ந்த மாணவர்கள் 100 சொற்களி லும் தரம்- 9,10,11 மத்திய பிரிவைச் சேர்ந்த மாணவர்கள் 150 சொற்களி லும் தரம் 12,13 மேற்பிரிவைச் சேர்ந்த மாணவர்கள் 200 சொற்களிலும் கட்டுரை எழுதவேண்டும்.

கட்டுரைத் தலைப்புக்கள் சமய பண் பாட்டு விழுமியங்கள், மனித வாழ் வின் நெறிமுறைகள், மாணவர்கள் வளர்க்கவேண்டிய திறமைகள், பண்பு கள் மற்றும் நல்லூரானின் பெருங் கருணை சார்ந்து அமையப்பெறும்.

மாணவர்களின் கட்டுரைக்கான தலைப் புகள் போட்டிக்கு முதல்நாள் உரிய பாடசாலை அதிபர்களுக்கு வழங்கப்படும்.

அதேவேளை பல்கலைக்கழக மற் றும் உயர்கல்வி மற்றும் நிறுவன மாணவர்கள் பங்குபற்றும் திறந்த பிரிவினருக்கான கட்டுரைகள் 250 சொற்களைக் கொண்டவை. திறந்த பிரிவில் பங்குகொள்ள விரும்புப வர் கள் எதிர்வரும் 8 ஆம் திகதி புதன் கிழமை நண்பகல் 12 மணிக்கு முன் னதாக sevvalinay_anam@gmail.com என்னும் மின்னஞ்சல் முகவ ரிக்கு தங்கள் பதிவை உறுதிப்படுத் திய பின் வருகை தரவேண்டும்.

ஒவ்வொரு பிரிவிலும் முதல் மூன்று இடங்களைப் பெறுவோருக்கு பரி சில்களும் அடுத்த ஏழு இடங்களைப் பெறுவோருக்கு பாராட்டுச் சான்றிதழ் களும் வழங்கப்படும் என ஏற்பாட்டா ளர்களால் அறிவிக்கப்பட்டுள்ளது.

(ச)

நகர அபிவிருத்தி அதிகாரசபையின் பொதுமக்கள் நடமாடும் சேவை

யாழ்ப்பாணம், ஓக. 5

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் வழிகாட்டலின் கீழ் நகர அபி விருத்தி அதிகாரசபையின் வடமாகாண அலுவலகத்தின் ஏற்பாட்டில் பொதுமக்கள் நடமாடும் சேவை இடம்பெறவுள்ளது.

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட் டத்துக்கான நடமாடும் சேவை எதிர்வரும் 9 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணி முதல் பி.ப. 2.30 மணி வரை யாழ்ப்பாணத்திலுள்ள நகர அபிவி ருத்தி அதிகாரசபையின் அலுவலகக் கட்டடத்தொகுதியின் இரண்டாம் மாடியி லும் வவுனியா, முல்லைத்தீவு மற்றும் மன்னார் மாவட்டங்களுக்கான பொதுமக் கள் நடமாடும் சேவை எதிர்வரும் 10 ஆம் திகதி காலை 8.30 மணி முதல் பி.ப. 2.30 மணி வரை வவுனியா கலாசார மண்டபத் திலும் நடைபெறவுள்ளது.

நகர அபிவிருத்தி அதிகாரசபையால் நகர அபிவிருத்திப் பிரதேசமாகப் பிரகடனப் படுத்தப்பட்டுள்ள பகுதிக்குள் மக்கள் எதிர்கொள்ளும் கட்டட நிர்மாணம், காணி உபபிரிவிடுகை மற்றும் ஏனைய அனும திகள் தொடர்பான பிரச்சினைகள், காணி தொடர்பான பிரச்சினைகள் மற்றும் சட்ட விரோத கட்டுமானங்கள் தொடர்பான பிரச்சினைகள் ஆகியவற்றுக்கு தீர்வுகள் பெற்றுக்கொடுக்கப்படும் என்று நகர அபி விருத்தி அதிகாரசபையின் வடமாகாண பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

(ஒ-14,26)

மாணவர் சிகையலங்காரத்தில் கவனம் செலுத்தப்படவேண்டும்

சிகையலங்கார சங்கத்தினருக்கு கோரிக்கை

வவுனியா, ஓக. 5

சிகையலங்கார நிலையங்கள் மாண வர்களின் ஒழுக்கநெறியை வழிப்ப டுத்தும் வகையில் மாணவர்களுக்கு சிகையலங்காரம் செய்யவேண்டும் என வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலய அதிபர் சிகையலங்கார சங்கத்தினருக்கு கடிதம் ஒன்றை அனுப்பி கோரிக்கை விடுத்துள்ளார்.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

அதிகளவு மாணவர்களைக் கொண்ட பாடசாலையாக எமது பாடசாலை [illegible]. மாணவர்கள் மத்தியில் சிகை அலங் காரம் தொடர்பில் கவனம் செலுத்துவ தில்லை என சமூக ஆர்வலர்களால் குற்றஞ்சாட்டப்படுகின்றது.

மாணவர்களுக்குச் சரியான முறை யில் ஒழுக்கநெறியை வழிப்படுத்தும் வகையில் சிகை அலங்காரம் மேற் கொள்ளப்படவேண்டும்.

அதன்படி அவர்கள் 'பொலிஸ்குரொப்' முறையில் முடிவெட்டப்பட்டு பாடசா லைக்கு சமுகமளித்தல் அவசியம்.

ஆகவே தங்களின் சங்க உறுப்பினர்க ளுக்கு இந்த விடயம் குறித்து மாணவர் களின் சிகையலங்காரம் தொடர்பில் இறுக்கமான நடைமுறையைப் பின் பற்றுமாறு கேட்டுக்கொள்கின்றோம் - என்றுள்ளது.

(ச-110)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

humedica Lanka

உங்களுடைய நன்கொடை

"FOOD FOR ALL" "அனைவருக்கும் உணவு" நிகழ்ச்சித் திட்டம்

ஹியூமெடிக்கா நிறுவனத்தினால் இம்மாதம் 5.6.7.12.13.14.19.20.21 ஆகிய தினங்களில் அனைவருக்கும் உணவு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பெண் தலைமைத்துவக் குடும்பங்கள். மாற்றுத்திறனாளிகள் குடும்பம் மற்றும் நாளாந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கான உலர் உணவுப் பொதியினைப் பெற்றுக்கொடுப்பதற்கான நிதி சேகரிப்பு நிகழ்வு யாழ்ப்பாணம் காகில்ஸ் பூட்சிற்றி **(Cargils Food City)** யில் காலை 10.00 முதல் மாலை 06.00 மணி வரை நடைபெறும் என்பதனை தெரிவித்துக்கொள்கின்றோம்.

DONATION ACCOUNT
Hatton National Bank PLC
BIC(SWIFT-Code):HBLILKLXXXX
Acct : 0090 1018 0216 C/A
Branch Code : 009, Wellawatte

HUMEDICA INTERNATIONAL LANKA
www.humedicalanka.com
humedicalanka
mail : lanka@humedica.org

ரணிலை சந்தித்த பின்னர் அடுத்த கட்டத் தீர்மானம்!

ரிஷாத் பதியுதீன் தெரிவிப்பு

கொழும்பு, ஓக.5

நாட்டைக் கட்டியெழுப்பும் ஜனாதிபதியின் வேலைத் திட்டங்களுக்கு ஆதரவளிக்கத் தயார். ஆனால் அரசாங்கத்தில் இணைந்து அமைச்சுப் பதவிகளைப் பெறுவது தொடர்பில் நாம் யாருடனும் கலந்துரையாட வில்லை. இன்று வெள்ளிக்கிழமை ஜனாதிபதியைச் சந்தித்துக் கலந்துரையாடுவோம். அதன்பின்னரே அடுத்த கட்ட நடவடிக்கை தொடர்பில் தீர்மானிக்கப்படும்.

இவ்வாறு அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாத் பதியுதீன் தெரிவித்தார்.

(எ-இ)

பேருந்து...

குறைக்கப்பட்டுள்ளதாலும் பேருந்துக் கட்டணங்கள் குறைக்கப்பட்டுள்ளன. அதனடிப்படையில் பேருந்துக் கட்டணம் 11.14 வீதத்தினால் குறைக்கப்பட்டுள்ளது. நேற்று நள்ளிரவு முதல் குறைந்தபட்ச பேருந்து கட்டணம் 34 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

(அ-ம)

காலை...

வல்வெட்டித்துறையின் தவிசாளர் கோணலிங்கம் கருணாகரமூர்த்தி கொரோனாத் தொற்றால் உயிரிழந்ததை அடுத்து, சுயேச்சைக் குழுவைச் சேர்ந்த ச.செல்வேந்திரா தவிசாளராகத் தெரிவுசெய்யப்பட்டார். குறித்த சுயேச்சைக் குழுவும் கூட்டமைப்பினரும் சுழற்சி முறையில் தவிசாளர் பதவியை வகிப்பது தொடர்பில் தமக்குள் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை ஏற்படுத்தியிருந்தனர். செல்வேந்திராவுடனான கூட்டமைப்பின் ஒப்பந்தத்தின் பிரகாரம் அவருடைய பதவிக்காலம் முடிந்ததை அடுத்து அவர் பதவியை இராஜினாமா செய்தார். இதையடுத்து புதிய தவிசாளர் பதவிக்கான தெரிவு உள்ளூராட்சி ஆணையாளர் பற்றிக் டிறஞ்சன் தலைமையில் நேற்று இடம்பெற்றது.

கூட்டமைப்பின் வேட்பாளர் நேற்று சுயேச்சையின் ஆதரவுடன் தவிசாளராகத் தெரிவுசெய்யப்படுவார் என்றே ஒப்பந்தத்தின் அடிப்படையில் திட்டமிடப்பட்டிருந்தது.

ஆனால், இறுதி நேரத்தில் சுயேச்சைக் குழுவினர் கூட்டமைப்புடனான ஒப்பந்தம் செல்லுபடியற்றது என்று அறிவித்து, தாமும் ஒரு வேட்பாளரை தவிசாளர் தெரிவுக்காக நிறுத்தப்போவதாக அறிவித்தனர்.

கூட்டமைப்பின் உறுப்பினர்களில் ஒருவர் கொழும்புக்குச் சென்றுள்ள நிலையில், கூட்டமைப்பில் நேற்று ஆறு பேர் மட்டுமே இருந்தனர். காங்கிரஸின் இரண்டு உறுப்பினர்களும் கூட்டமைப்பு ஆதரவு வழங்கினாலும் இரு தரப்பிலும் தலா 8 வாக்குகளே கிடைக்கப்பெறும். இதனால், கூட்டமைப்பினரும் காங்கிரஸின் உறுப்பினர்களும் சபைக்குச் செல்லாது புறக்கணித்தனர். ஒட்டுமொத்தமாக 9 உறுப்பினர்கள் சபைக்குச் செல்லாததை அடுத்து, கோரம் போதாமையால் மறு அறிவித்தல் வரையில் சபை ஒத்திவைக்கப்பட்டது.

(அ-ம-26-125)

மின்வெட்டு...

மாகக் குறைக்கப்படும் என்று இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

கடந்த பல வாரங்களாக நாட்டில் தினசரி சுமார் மூன்று மணிநேர மின்வெட்டு நடைமுறையில் இருந்தது. இந்த நிலையில், இன்றுமுதல் மின்வெட்டின் நேர அளவு ஒரு மணிநேரமாகக் குறைக்கப்பட்டுள்ளது.

(அ-ம)

சீனியின்...

சீனியின் விலை 270 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், 600 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்ட ஒருகிலோகிராம் பருப்பின் விலை 410 ரூபாவாகவும், 220 ரூபா முதல் 240 ரூபா வரையில் விற்கப்பட்ட உருளைக்கிழங்கின் விலை 150 ரூபாவாகவும், 600 ரூபாவுக்கு விற்கப்பட்ட வெள்ளைப்பூடு 420 ரூபாவாகவும், 1,750 ரூபாவாக விற்கப்பட்ட செத்தல் மிளகாய் 1,300 ரூபாவாகவும் விலை குறைக்கப்பட்டுள்ளது.

(அ-ம)

அமைச்சுப்...

நேற்றையதினம் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நான் அமைச்சுப் பதவியை ஏற்கப் போகிறேன் என்ற கருத்தை எனது கட்சியைச் சேர்ந்த ஒருவர் ஊடகங்களுக்குத் தெரிவித்திருந்தார். அவரது கருத்தை நான் பெரிதாக எடுக்கவில்லை. ஏனெனில் சிலவேளை ஊடகங்களுக்கு முன்னால் தனது ஆதங்கத்தை அவர் வெளிப்படுத்தியிருக்கலாம். அவ்வாறான சம்பவங்கள் எனக்கும் ஏற்பட்டது.

நான் முதலமைச்சராகப் பதவி வகித்தபோது பெற்றுக்கொண்ட சம்பளத்தைப் பார்க்கிலும், அரை மடங்கு அதிகமான சம்பளத்தை அமைச்சர்கள் பெற்றார்கள். நான் அப்போது விரும்பியிருந்தால் அமைச்சராகப் பதவிவகித்து சலுகைகளை அனுபவித்திருக்கலாம். நான் அவ்வாறு செய்யவில்லை. தமிழர்களின் நலனுக்காக நான் மிகவும் அக்கறையுடனும் வெளிப்படையுடனும் செயற்படுகின்றேன். சிலர் என்மீதும் குற்றச்சாட்டுகளை முன்வைப்பார்கள். தமிழ் மக்களின் அரசியல் தீர்வு மற்றும் அவர்களின் அரசியல் அபிலாஷைகளை வென்றெடுக்கக் காத்திரமான முன் நடவடிக்கைகளை மேற்கொள்வதே எனது நிலைப்பாடாகும் - என்றார்.

(அ-ம-20)

யானை தாக்கி...

பதற்காகச் சென்றுகொண்டிருந்தபோது, காட்டு வீதியில் குறுக்கிட்ட யானை தாக்கியதில் அவர் உயிரிழந்தார். இதன் போது அவர் பயணித்த சைக்கிளும் சுக்குநூறானது என்று பொலிஸாரின் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

(அ-ம)

அச்சுவேலி பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவு சங்கம் (வ-து) வேலை வாய்ப்பு விண்ணப்பம் கோருதல்

பதவி: களஞ்சிய முகாமையாளர் (பயிற்சியாளர்கள்)

- மேற்படி சங்கத்தின் களஞ்சிய முகாமையாளர் பதவிக்கு பயிற்சியாளராக இணைத்துக் கொள்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
- க.பொ.த (சாதாரண) தரம் சித்தியுள்ள 18-35 வயதிற்கு உட்பட்ட ஆண்கள் விண்ணப்பிக்கலாம்.
- விண்ணப்பதாரிகள் தமது சுயவிபரங்கள் அடங்கிய சுயமாக தயாரித்த விண்ணப்பங்களை 15.08.2022ற்கு முன் தலைவர் பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவு சங்கம் அச்சுவேலி எனும் முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைக்க வேண்டும்.

தலைவர்
ப.தெ.வ.அ.கூ.சங்கம் அச்சுவேலி

மரண அறிவித்தல்

தோற்றம் 27 . 05 . 1957

மறைவு 04 . 05 . 2022

நவராஜா உசந்தினி

உரும்பிராய் மேற்கு சிவகுல வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நவராஜா உசந்தினி அவர்கள் 04.08.2022 புதன்கிழமை இயற்கை எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற தபேந்திரன் இராஜேஸ்வரி அவர்களின் அன்பு புதல்வியும் காலஞ்சென்ற இராசரத்தினம் நவராஜா (ஓய்வு பெற்ற இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபன பொறியியல் மேற்பார்வையாளர்) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற இராசரத்தினம் நாகம்மா அவர்களின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற ரமாலி, சாமினி, வாசுகி, தவராஜன், யோகந்தி ஆகியோரின் அன்பு சகோதரியும் காலஞ்சென்ற தனுசன், தமயந்தி, தாட்சாயினி ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற ஜெயக்குமார், சிறீக்குமார், சிவசக்தி, சந்குணநாதன், காலஞ்சென்ற ஜெயமணிதேவி, வசந்தாதேவி, காலஞ்சென்ற கமலாதேவி, காலஞ்சென்ற ஆறுமுகம் வடிவேல், திருச்செல்வம் ஆகியோரின் மைத்துனியும் சிவப்பிரியா, கிஷோக்குமார், பத்மராஜன் ஆகியோரின் அன்பு மாமியாரும் டனிசா, டவ்யனா, பகிஷனா, மதுமிலா, ஹர்மிசா, துசிந்தன், வலக்ஷன், நிவோஷன், தருக்ஷன் ஆகியோரின் அன்பு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.08.2022) வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக உரும்பிராய் வேம்பன் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சிவகுல வீதி,
உரும்பிராய் மேற்கு, உரும்பிராய்.

தகவல்
076 3828 907

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

யாழ். இந்துவின் கால்கோள் விழா

யாழ்ப்பாணம், ஓக. 5

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில், 2022 ஆம் ஆண்டுக்கான தரம் 6 மாணவர்களின் கால்கோள் விழா நாளை சனிக்கிழமை காலை 8 மணிக்கு குமார சுவாமி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது என்று கல்லூரி அதிபர் ஆர். செந்தில் மாறன் அறிவித்துள்ளார். (அ-ம)

இலங்கையர்களின்...

என்று வலியுறுத்தியுள்ளார் அமெரிக்க இராஜாங்கச் செயலரான அன்ரனி பிளிங்டன்.

வெளிவிவகார அமைச்சர்களின் மாநாடொன்று கம்போடியாவில் இடம்பெற்று வருகின்றது. இந்த மாநாட்டில் கலந்து கொண்ட அன்ரனி பிளிங்டன், இலங்கை வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரியை நேற்றுச் சந்தித்துப் பேச்சு நடத்தினார். இதன்போதே அவர் இவ்வாறு வலியுறுத்தினார்.

இலங்கை நெருக்கடியான தருணத்தில் இருந்து விடுபடுவதற்கு முயன்றுகொண்டிருக்கும் இந்தத் தருணத்தில், அரசமைப்பின் அடிப்படையில் செயற்பட வேண்டிய அவசியத்தையும், அமைதியாக ஒன்றுகூடுவதற்கான இலங்கையர்களின் உரிமைகளையும் உணர்ந்து , பேணப்படவேண்டும் - என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

அதேநேரம், பொருளாதார நெருக்கடி நிறைந்த காலத்தில் அமெரிக்கா வழங்கிய நிதியுதவிக்காகவும், நாணய நிதியத்துடனான பேச்சுக்கு அமெரிக்கா வழங்கிய ஆதரவு மற்றும் ஒத்துழைப்புக்காகவும் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி நன்றியைத் தெரிவித்தார். (அ-ம)

செப். முதல்...

சர்வகட்சி அரசாங்கம் அமைப்பது குறித்து சுதந்திரக் கட்சியினர், நாடாளுமன்ற உறுப்பினர்களான பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் மற்றும் டலஸ் அழகப்பெரும உள்ளிட்ட குழுவினர் நேற்று மாலை ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்துக் கலந்துரையாடியபோதே ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

22 ஆவது அரசமைப்புத் திருத்த வரைவு தற்போது நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அது தொடர்பில் கலந்துரையாடி பொதுவான இணக்கப்பாட்டுக்கு வருவதே சிறந்தது. நாடாளுமன்ற துறைசார் கண்காணிப்புக் குழுக்களை உடனடியாக நிறுவ நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அவற்றின் தலைவர்களுக்கு அலுவலக வசதிகளை வழங்குவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது. நாட்டுக்கு அரச சேவையில் இருந்து அதிவினைத்திறன் வாய்ந்த சேவை தேவை. துறைசார் கண்காணிப்புக் குழுக்களின் தலைவர்களை அமைச்சரவைக்கு அழைக்கவும் நான் தயார் என்றார்.

சுதந்திரக்கட்சியினால்முன்வைக்கப்பட்ட சர்வகட்சி அரசாங்கம் தொடர்பான ஆலோசனைக்கு மதிப்பளித்ததற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு நன்றி தெரிவித்த மைத்திரிபால சிறிசேன, சர்வகட்சி அரசாங்கத்துக்கு தமது கட்சி பூரண ஆதரவை வழங்கும் என்றும் தெரிவித்தார்.

அங்கீகரிக்கப்பட்ட அமைப்பில் சர்வமென்று சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார். அதற்காக அனைவரும் ஒன்றிணைந்து இதனை வெற்றியடையச் செய்ய வேண்டுமெனவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

மக்கள் கோரிய மாற்றம் தற்போது இடம் பெற்றுள்ளதாக சுதந்திரக் கட்சியின் தேசிய அமைப்பாளர் துமிந்த திஸாநாயக்க சுட்டிக்காட்டியதுடன், சுனாமியின் போதும் போர் வெற்றியின் போதும் கைவிடப்பட்ட சந்தர்ப்பங்களை தற்போது கைவிடாமல் நாட்டை சரியான பாதையில் மீண்டும் கொண்டு செல்வதற்கு நடவடிக்கை எடுப்பது அனைவரினதும் பொறுப்பாகும் எனக் குறிப்பிட்டார்.

அதேநேரம், பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ், டலஸ் அழகப்பெரும உள்ளிட்ட குழுவினருடன் இடம்பெற்ற கலந்துரையாடலில் 10 வருடங்களுக்கு ஏற்ற பொருளாதாரத் திட்டத்தை வகுக்க அனைவரும் ஒன்றிணைந்து அதற்கான அடித்தளத்தை அமைக்க வேண்டும் என ஜனாதிபதி தெரிவித்தார்.

பொருளாதார வீழ்ச்சியும், பசியும் போராட்டக்காரர்களின் ஆரம்பத்துக்கு வழிவகுத்தன என சுட்டிக்காட்டிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, போராட்டக்காரர்கள் கடைசி நேரத்தில் வன்முறையுடன் போராட்டத்தை முடித்துக்கொண்டதாகத் தெரிவித்தார். அன்று நாடாளுமன்றத்தை ஆர்ப்பாட்டக்காரர்களிடம் இருந்து பாதுகாக்காவிட்டால் இன்று ஜனநாயகம் பற்றி இவ்வாறு ஒன்றிணைந்து கலந்துரையாட வாய்ப்பே இருக்காது என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதன்போது, சர்வகட்சி அரசாங்கம் தொடர்பில் நல்ல எதிர்பார்ப்பு உள்ளது. அது ஒருபோதும் மாறவே கூடாது என பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் சுட்டிக்காட்டினார். அத்துடன், முறையான சர்வகட்சி அரசாங்கத்துக்கான பேச்சுக்கு அனைவரும் தயாராக இருக்க வேண்டும் என்று டலஸ் தெரிவித்தார். (அ-ம)

காலிமுகத்திடலை...

பதிலடி கொடுத்துள்ளனர்.

காலிமுகத்திடலில் போராட் டத்தில் ஈடுபடுபவர்கள் அரசாங்கத்தால் போராட்டங்கள் நடத்துவதற்கு என்று ஒதுக்கப்பட்டுள்ள பகுதிகளுக்குச் செல்ல வேண்டும் என்றும், இன்று மாலை 5 மணிக்குள் அவர்கள் விலக வேண்டும் என்றும் பொலிஸார் ஏற்கனவே அறிவுறுத்தியிருந்தனர். இந்த நிலையிலேயே, பொலிஸாரின் இந்த உத்தரவை ஏற்பதற்கு போராட்டக்காரர்கள் மறுத்துள்ளனர்.

'ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் உத்தரவுகளைச் செவிமெடுப்பதற்கு ஆர்ப்பாட்டக்காரர்கள் தயாரில்லை. தற்போது நாம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடும் பகுதி கடந்த அரசாங்கத்தால் ஆர்ப்பாட்டத்துக்கு என்று அறிவிக்கப்பட்ட பகுதி 'என்று போராட்டக்களத்தின் முன்னிலை செயற்பாட்டாளர்களின் ஒருவரான ஜனக தெரிவித்துள்ளார். (அ-ம)

மஹிந்த...

காரணம்? என்று கேள்வி எழுப்பியுள்ளார் எதிர்க்கட்சித் தலைவரான சஜித் பிரேமதாஸ.

அரசாங்கத்துக்கு எதிரான போராட்டங்களை முன்னெடுத்த தொழிற்சங்கவாதிகள், முன்னிலைச் செயற்பாட்டாளர்கள் தொடர்ச்சியாகக் கைதுசெய்யப்படும் நிலையில், இது தொடர்பில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அமைதியாகவும், நாகரிகமாகவும் போராட்டம் மேற்கொண்ட ஜோசப் ஸ்டாலின் போன்ற தொழிற்சங்கத் தலைவர் கஷ்ட தண்டனைக்குட்படுத்தி கைது செய்வதற்கும், தற்போதைய வன்முறை சார் அடக்குமுறையின் முன்னோடியான மஹிந்த ராஜபக்ச இன்னமும் சுதந்திர மாக வெளியே நடமாடுவதற்குமான காரணம் என்ன?

உழைக்கும் மக்களுக்காகவும், ஆசிரியர் சமூகத்துக்காகவும் போராடிய ஜோசப் ஸ்டாலின் கைது செய்யப்பட்டுள்ளபோது, அடக்குமுறையின் தந்தையான மஹிந்த ராஜபக்ச ஆரோக்கிய மாக பொழுதை கடத்திக் கொண்டிருக்கிறார். அது எவ்வாறு?

மனிதநேயத்தின் பெயரால் நாடு குறித்து சிந்தித்து ஒன்றாக இணைந்து செயற்பட வேண்டிய தருணத்தில், எதேச்சதிகார மாக அரசியல் பழிவாங்கல்களில் ஈடுபடுவதை நான் வன்மையாகக் கண்டிப்பதுடன், இந்த அரச பயங்கரவாதத்தை உடனடியாக நிறுத்துமாறும் வலியுறுத்துகின்றேன்.

வெடிகுண்டுகள், வாள்கள், துப்பாக்கி ரவைகள் போன்ற ஆயுதங்களால் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணாமல், கலந்துரையாடல் மற்றும் இணக்கப்பாட்டின் மூலம் பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டும். எந்தவொரு குடிமகனும் தனக்கென ஒரு கருத்தைக் கொண்டிருப்பதற்கும், அதற்காக முன்நிற்கவும், பேசவும், ஒன்றுகூடவும், அமைதியான முறையில் போராட்டம் நடத்தவும் உரிமையுண்டு. அஹிம்சை வழியில் போராடும் உரிமையை எவராலும் பறிக்க முடியாது. ஜோசப் ஸ்டாலின் தனக்குள்ள உரிமைகளை நாட்டுக்காக ஜனநாயக முறையில் பயன்படுத்தினார் - என்றார். (அ-ம)

ஜோசப் ஸ்டாலின்...

மே மாதம் 28ஆம் திகதி நீதிமன்றத்தின் தடையுத்தரவு பெறப்பட்ட செரண்டிப் சுற்றுவட்டப் பகுதிக்குள் அத்துமீறிப் பிரவேசித்தார் என்ற குற்றச்சாட்டு அவருக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ளது. நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்ட அவர் நேற்றையதினம் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்ட தையடுத்து, விளக்கமறியலில் வைக்கப்பட்டார். (அ-ம)

ஜோசப் ஸ்டாலினை...

விளைவுகளைச் சந்திக்க வேண்டியிருக்கும் என்று இலங்கை ஆசிரிய சங்கத்தின் உபதலைவர் தீபன் திலீசன் தெரிவித்தார்.

யாழ். ஊடக அமையத்தில் நேற்று இடம் பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கையின் மக்களின் ஜனநாயக உரிமைகளுக்காகமுன்னின்றுஉழைத்த ஜனநாயகச் செயற்பாட்டாளர்கள் தற்போது திட்டமிட்ட வகையிலேயே கைது செய்யப்பட்டுக் கொண்டிருக்கின்றனர். தற்போது ஆட்சிப்பீடம் ஏறியுள்ள ரணில் - ராஜபக்ச அரசாங்கம் பதவி மோகத்துக்காக அவசரகாலச் சட்டத்தைப் பிரகடனப்படுத்தி பொதுமக்களையும் ஜனநாயக வாதிகளையும் அச்சுறுத்தும் செயற்பாடுகளைச் செய்துகொண்டு வருகின்றது. உண்மையில் ஜோசப் ஸ்டாலின் கைது என்பது அப்பட்டமான, அராஜகமான அரச பயங்கரவாதத்தை காட்டிநிற்கின்றது.

காலிமுகத்திடல் போராட்டத்தின் 50 வரத்துக்குத் தடைசெய்ய செரண்டிப் சுற்றுவட்டத்துக்குள் பிரவேசித்தார் என்ற குற்றச்சாட்டு ஜோசப் ஸ்டாலினுக்கு எதிராகச் சுமத்தப்பட்டுள்ளது. ஜோசப் ஸ்டாலினின் வீட்டுக்குச் செல்வதற்குப் பயன்படுத்தும் ஒரேபாதையாக செரண்டிப் சுற்றுவட்டம் உள்ளது. இப்படியிருக்கையில், அவர் அனுதினமும் பயன்படுத்தும் ஒரு பாதையை - அவர் தனது வீட்டுக்குச் செல்லும் பாதையை - போக்குவரத்துத் தடைப்பகுதியாக அறிவித்து அவரைக் கைது செய்வது என்பது எந்த வகையில் நியாயம்?

ஜோசப் ஸ்டாலினின் கைதை வன்மையாகக் கண்டிக்கிறோம். அவர் உடனடியாக விடுதலை செய்யப்பட வேண்டுமென்று நாடளாவிய ரீதியில் முதற்கட்ட நடவடிக்கையாக பாடசாலைகள் முன்பாக இடைவேளை நேரத்தில் ஒன்றுகூடி இன்று (நேற்று) போராட்டத்தை மேற்கொண்டோம். ஜோசப் ஸ்டாலின் உடனடியாக விடுதலை செய்யப்பட வேண்டும். இல்லை என்றால் அரசாங்கம் பாரதூரமான விளைவுகளைச் சந்திக்கும் - என்றார். (அ-ம-20)

நாயைக்...

சிலர் இணைந்து, நாய் ஒன்றை கைக்கோடரியினால் வெட்டிக் கொடூரமாகக் கொலை செய்யும் காட்சி சமூக ஊடகங்களில் வெளியாகியது. புங்குடுதீவு 9ஆம் வட்டாரத்தில் இந்தச் சம்பவம் இரண்டு நாள்களுக்கு முன் இடம்பெற்றதாக விசாரணைகளில் தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் பிரியந்த லியனகேயின் உத்தரவில் சம்பவம் தொடர்பில் ஊர்காவற்றுறை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்தனர். இதையடுத்து, புங்குடுதீவு 9ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த 21 மற்றும் 35 வயதுடைய இருவர் நேற்று ஊர்காவற்றுறை பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

நாயை வெட்டிக்கொல்லப் பயன்படுத்திய கைக்கோடரி மற்றும் அதனை காணொலி எடுத்த அலைபேசி என்பனவும் பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டன. மிருக வதைச் சட்டத்தின் கீழ் சந்தேகநபர்கள் ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ளனர். நாயை வெட்டிக் கொன்றவர்களில் முதன்மைச் சந்தேகநபர் தலைமறைவாகியுள்ள நிலையில், அவர் தேடப்பட்டு வருகிறார். (அ-ம-26-125)

மாகாணசபை...

அனுப்பிவைத்துள்ள ஊடக அறிக்கையிலே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

குறித்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:-

மாகாண சபை முறைமையை முழுமையாக செயற்படுத்த வேண்டும் என பல மாகாணங்கள் போராடும் நிலையில், உரத்த குரலில் பேசும் சிலரின் செயற்பாடுகள் மாகாண அதிகாரங்களை தவறான பாதையில் சித்திரிப்பதாக அமைகின்றன. வடக்கு மாகாண அபிவிருத்திக்காக பெருநகர அபிவிருத்தி அமைச்சுடன் இணைந்து 25க்கும் மேற்பட்ட நிறுவனங்கள் மாகாணத்தில் பணியாற்றியுள்ளன.

மேலும் மாகாண அபிவிருத்தி தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விடம் தெளிவான அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிலையில், நோர்வே நாட்டின் மாகாண ஓய்வூதிய திட்டம் வழங்கும் நடைமுறை தொடர்பிலும் அறிக்கை சமர்ப்பித்துள்ளோம் - என்றுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லிணக்கத்தின் முதற்புள்ளியாக அரசியல்கைதிகளை விடுதலை செய்க

குரலற்றவர்களின் குரல் அமைப்பு கோரிக்கை

யாழ்ப்பாணம், ஓக. 5

நாட்டில் புரையோடிப் போயிருக்கின்ற இனமுறுகலுக்கு அந்தந்தக் காலங்களில் தீர்வு காணப்படாததன் காரணமாகவே இன்று நாடு பொருளாதாரச் சீரழிவை எதிர்கொண்டுள்ளது. ஆகவே நல்லிணக்கத்துக்கான முதற்புள்ளியாக அரசியல்கைதிகள் விடுதலையை உறுதிசெய்யவேண்டுமென குரலற்றவர்களின் குரல் அமைப்பு வேண்டுகோள் விடுத்துள்ளது.

இதுதொடர்பில் குரலற்றவர்களின் குரல் அமைப்பால் வெளியிடப்பட்ட அறிக்கையில் மேலும் உள்ளதாவது:- 10 முதல் 26 ஆண்டுகளாக அவசரகாலச்சட்டம் மற்றும் பயங்கரவாதத்தடைச்சட்டம் போன்றவற்றின்கீழ் கைதுசெய்யப்பட்டு நாட்டின் பல்வேறு சிறைச்சாலைகளிலும் 46 தமிழ் அரசியல் கைதிகள் சிறை வைக்கப்பட்டுள்ளார்கள்.

போர் ஓய்ந்து இத்தனை ஆண்டுகள் கடந்த பின்பும் சிறைப்படுத்தி வைத்திருப்பது என்பது எந்தவகையிலும் அறமாக இருக்க முடியாது.

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் ஆராய்வதாக ஜனாதிபதி தரப்பிலிருந்து தெரிவிக்கப்படுகிறது. பதவிக்கு வருகின்ற ஒவ்வொரு அரசாங்கங்களும் அரசியல் கைதிகள் தொடர்பாக ஆணைக்குழுக்கள் அமைப்பது, சிறப்பு நீதிமன்றம் நிறுவுவது, வழக்கு நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்படும் என உரைப்பது ஆகியவை காலங்காலமாக நடைபெற்று வருகின்ற மாயவித்தை. இதுவரை எந்தவொரு அரசும் அரசியல் கைதிகள் விடுதலையை முழுமையாக நடைமுறைப்படுத்தியதாக சரித்திரங்கள் இல்லை. ஆகவே கைதிகள் விடுதலையை ஆராய்வதாகக்கூறி, இதற்கு மேலும் காலம் கடத்துவதைத் தவிர்த்து உண்மையான நல்லெண்ணத்துடன் சிந்தித்து அரசியல் தீர்மானம் ஒன்றை மேற்கொள்ளவேண்டும். அனைத்து அரசியல் கைதிகளும் அவர்கள் தம்குடும்பத்தினருடன் சேர்ந்து வாழ ஒரு சந்தர்ப்பத்தை அளிக்கவேண்டும். கடந்த காலங்களைப் போலன்றி தற்போது சிங்கள மக்களும் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தும் நிலைமையே மேலோங்கி காணப்படுகிறது.

இந்தச் சந்தர்ப்பத்திலே தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை விவகாரத்தை மனிதநேய அடிப்படையில் கையாளுமாறு இலங்கை அரசாங்கத்தை சர்வதேச சமூகங்கள் வலியுறுத்தவேண்டும். அத்துடன் நாடாளுமன்றத்திலே அங்கம்வகிக்கின்ற அனைத்து தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களும் கட்சிபேதமற்று இதுதொடர்பில் அரசுடன் இணக்கமான பேச்சை தொடரவேண்டும் - என்றுள்ளது. (ச)

வேலையாட்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் பற்சிகிச்சை நிலையம் ஒன்றிற்கு (Dental Clinic) முன் அனுபவம் உள்ள G.C.E O/L சித்தி பெற்ற பெண் ஒருவர் Dental Assistant பதவிக்கு தேவைப்படுகின்றார்.

077 110 1045, 077 487 1028

காணி விற்பனைக்கு

யாழ் நாவற்குழியில் 57 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு

- A.09 பிரதான வீதி முகப்புடனும் மற்றும் 20 அடி பாதையுடன் பின் பக்கமாகவும்
- நாவற்குழி சந்தியில் இருந்து 500 m தூரத்தில் மூன்று பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- A.09 வீதியில் இருந்து 200 m தூரத்தில் 20 அடி பாதையுடன் அமைந்துள்ள காணி ஒரு பரப்பின் விலை மூன்று லட்சம் (300000/-)
- இயற்கை சூழலுடன் வியாபார நிலையங்கள், களஞ்சியசாலைகள், மண்டபங்கள், வீடுகள் அமைப்பதற்கு உகந்த சூழல்.

பார்வை இடும் நேரம் :காலை 8 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை

தொடர்புகளுக்கு

076 490 5403, 076 491 2493,076 490 6029

வேலை வாய்ப்பு

பிரபல வர்த்தக நிலையம் ஒன்றிற்கு பெண் விற்பனையாளர் தேவை (Sales Girls) வேலை நேரம் 09.00 am to 07.00 pm. மாதத்தில் 4 நாட்கள் விடுமுறை, கவர்ச்சி காரமான சம்பளமும் வழங்கப்படும். சுய விரபக்கோவையை WhatsApp மூலம் அனுப்பி வைக்கவும். (நல்லூர், யாழ்ப்பாணத்தை சேர்ந்தவர்கள் விரும்பத்தக்கது.)

WhatsApp: 074 191 7461

(CS 20190) (3/6)

வேலை வாய்ப்பு

பிரபல வர்த்தக நிலையம் ஒன்றிற்கு பகுதி நேர காசாளராக (Part Time Cashier) வேலை செய்வதற்கு பெண் வேலையாள் தேவை. வேலை நேரம் 05.00 pm to 09.00 pm வரை. விரும்புபவர்கள் WhatsApp மூலம் உங்கள் சுய விபரக்கோவையை அனுப்பி வைக்கவும். (திருநெல்வேலியை அண்மித்த வர்கள் விரும்பத்தக்கது). (CS 20190) (3/6)

WhatsApp: 074 191 7461

இலங்கை உணவு நெருக்கடி: உதவி வழங்க நோர்வே முடிவு

கொழும்பு, ஓக.5

இலங்கையில் ஏற்பட்டுள்ள உணவு மற்றும் போஷாக்கு நெருக்கடி தொடர்பாக நோர்வே கவலை கொண்டுள்ளது என்று அந்த நாட்டு வெளிவிவகார அமைச்சர் என்னிகன் குய்ட்ஃபெல்ட் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

இலங்கையில் ஏற்பட்டுள்ள உணவு மற்றும் ஊட்டச்சத்து நெருக்கடி பெண்கள் மற்றும் குழந்தைகள் மீது கடுமையான தாக்கத்தை ஏற்படுத்துகிறது.

இந்தத் தேவைகளை நிவர்த்தி செய்ய 13 மில்லியன் குரோனை வழங்க நோர்வே தீர்மானித்துள்ளது.

விரைவான நடவடிக்கை எடுக்கப்படாவிட்டால் வரும் மாதங்களில் நிலைமை இன்னும் மோசமாகிவிடும். அதைக் கருத்தில் கொண்டு ஐக்கிய நாடுகள் சபை, மனிதாபிமான பதில் திட்டத்தை உருவாக்கியுள்ளது.

இதில் பாதிக்கப்படக்கூடிய குழுக்களை இலக்காகக்கொண்ட உலக உணவுத் திட்டத்துக்கு 5 மில்லியன் குரோனையும், ஐக்கிய நாடுகளின் சிறுவர் நிதியத்துக்கும் சனத்தொகை அமைப்புக்கும் 8 மில்லியன் குரோனையும் நோர்வே வழங்கவுள்ளது.

இதேவேளை- பாலியல் மற்றும் பாலின அடிப்படையிலான வன்முறைகளை எதிர்த்துப் போராடுவதற்கும் குழந்தைகளுக்குப் பாதுகாப்பை வழங்குவதற்கும் நோர்வே முன்னுரிமை அளிக்கிறது - என்றார். (எ-இ)

சாரணர் சேவை மாத செயற்பாடு ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஓக. 5

யாழ்.மாவட்ட சாரணர் கிளைச் சங்கத்தால் தேசிய சாரணர் சேவை மாத செயற்பாடு நேற்றுமுன்தினம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சேவை மாத செயற்பாட்டை யாழ்.மாவட்ட சாரணர் சங்கத்தின் தலைவரும் யாழ்.மாவட்டச் செயலருமான க.மகேசன் ஆரம்பித்து வைத்தார்.

நிகழ்வில் யாழ்.மாவட்ட மேலதிக மாவட்டச் செயலர் ம.பிரதீபன், சாரண மாவட்ட ஆணையாளர் இ.தவகோபால், உதவி மாவட்ட ஆணையாளர்கள், யாழ்.மாவட்ட சாரணர்கள், சாரண ஆசிரியர்கள் மற்றும் திரிசாரணர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்தத் தேசிய மாத செயற்பாடானது கடந்த முதலாம் திகதி தொடக்கம் எதிர்வரும் 31ஆம் திகதிவரை இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது

வட்டு. பொலிஸ் நிலையத்துக்கு புதிய பொறுப்பதிகாரி நியமனம்

வட்டுக்கோட்டைப் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றிய பொறுப்பதிகாரி இடமாற்றம் பெற்றுச் சென்ற நிலையில், நிலையத்தின் புதிய பொறுப்பதிகாரியாக டபிள்யூ.டி.பிரிகொஸ்தா நியமிக்கப்பட்டுள்ளார். அதற்கமைய அவர் தனது கடமைகளை நேற்று முன்தினம் சர்வமதத்தலைவர்களின் முன்னிலையில் பொறுப்பேற்றார். (ஒ-14-125)

நீங்கா நினைவலைகள்

11ஆம் ஆண்டு 12ஆம் ஆண்டு

பிறப்பு 05.02.1933 இறப்பு 30.06.2011

பிறப்பு 04.06.1935 இறப்பு 16.08.2010

மாதகல் மேற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட

அமரர் வேலுப்பிள்ளை பூபாலசிங்கம்

(காங்கேசன்துறை சிமெந்து கூட்டுத்தாபன முன்னாள் உத்தியோகத்தர்)

திதி: அபரபக்க சதுர்த்தசி (27.06.2022)

உங்கள் இருவரையும் தேடி ஊர் உலகம் தேடி
நாயாய் அலைகின்றோம் எப்போ கிடைப்பீர்கள்?
யாரைக் கேட்கிறது எங்கே ஆறுவோம்?

அம்மாவின் பிரிவுத்துயர் தாழாமல்
அவரோடு நீங்களும் சென்றது ஏன் தொடர்ந்து?
உங்கள் திருமண தினத்தன்று
அக்கினியில் நீங்கள் செய்துகொண்ட
சத்தியம் தான் காரணமோ?

வேதனைகள் வேர் வரை சென்றாலும்
விழுதுகளாய் எம்மைத் தாங்கினீர்கள்!
உங்கள் இருவரின் குரல் கேட்காமல்
பரிதவிக்கும் எங்கள் குமுறல்கள்
உங்கள் காதுகளில் கேட்கிறதா?

ஊர் விட்டு வந்து நம் சொந்த ஊருக்கு
திரும்ப முடியாமல் தவித்த தவிப்பும்
இப்போ ஊருக்கு போகு நிலை வந்தும்
போவதற்கு நீங்கள் இல்லையே அப்பா....

உயரங்கள் நாம் காண எம்
வாழ்க்கைப் பயணத்தில் துணையாய் இருந்த
ஈரிரண்டு கண்களையும் கண்கெட்ட
எமனுக்கோ பொறுக்கவில்லை

நாள்கள் வாரமாகி வாரங்கள் மாதமாகி
மாதங்கள் ஆண்டாகி போனாலும்
ஆறவில்லை எங்கள் துயர்

உங்கள் வார்த்தைகள் எம்மை வாழவைக்கும்
உங்கள் நினைவுகள் எம்மை வாழ்த்திடும்

திருமதி பாக்கியம் பூபாலசிங்கம்

திதி: பூர்பக்க அட்டமி (05.08.2022)

அம்மா நீ சென்ற கணமும்
அம்மா நீ சொன்ன வார்த்தைகளும்
அம்மா நீ செய்த உன்னதங்களும்
அம்மா நீ தந்த நெறிகளும்
எம் நெஞ்சினில் என்றும் அழியாதம்மா
எழுகின்ற கேள்விகளுக்கெல்லாம்

நாளும் விடை தேடுகின்றோம் அம்மா!
எங்கள் வலிகளைத் தாங்க
யாருமே இல்லையம்மா
அப்பா அம்மா இல்லாத
அநாதைகளானோம் அம்மா
அந்த இறைவனே கண்ணீரைப் பரிசாகத் தந்து
மௌனம் காணுகின்றார் அம்மா

அன்பு அம்மாவே!
கொடிய நோய் வடிவில் காலன்
கொன்றுவிட்டானே உங்களை
அன்று மாலைவரை நீங்கள் புரிந்த அன்பு மழை
இன்னும் எம் கண்முன்னே வந்து செல்லுதம்மா.....

நாடு கடந்து வந்து நாம் உங்களைக் கண்டு
நாளும் பொழுதும் மகிழ்ந்து இருந்த கணங்களும்
மருமகளையும், பேரப்பிள்ளைகளையும்
நீ கொஞ்சிக் குலாவிய தருணங்களும்
என்றும் உங்களை நினைவூட்டுகின்றது அம்மா.....

நீங்கள் எனக்காக கட்டிய வீடு
இன்று பாலைவனமாய் கிடக்கின்றது
நீங்கள் இன்று இருந்திருந்தால்
நீங்களாவது அந்த வீட்டில் இருந்திருப்பீர்களே அம்மா.....
உயிரைத் தந்து உடலில் சுமந்து
உலகில் வாழ உருவம் தந்த
தெய்வம் நீயம்மா!

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!

மாதகல் மேற்கு,
மாதகல்.

என்றும் உங்கள் நினைவுகளுடன்
குடும்பத்தினர்
மகன் - 077 774 3185

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 05.08.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.